தாகூர் தரிசனம்

UNIVERSITY LIBRARY
3 1 MAY 1957
MADRAS

கல்கி

UNIVERSITY EXTENSION
LIBRARY MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

பாரதி பதிப்பகம்

தியாகராயநகரம் :: சென்னை—17.

முதற் பதிப்பு : ஜனவரி, 1954
இரண்டாம் பதிப்பு : மார்ச், 1956.

இந்நூல் உரிமைகள் அனைத்தும் "கல்கி"யின் குமாரர் K. ராஜேந்திரன் அவர்கட்கு உரியது. அவரிடம் இருந்து உரிமை பெற்று இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது.

2—3—56. பாரதி பதிப்பகம்.

விலை ரூ. 1—8—0

1300
J6

மாருதி பிரஸ், இராயப்பேட்டை, சென்னை—14.

முதற் பதிப்பின் பதிப்புரை

புத்தகம் வாங்குவதற்காக ஒரு அன்பர் வந்தார். பரப்பி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். என்ன புத்தகம் வாங்குவது என்று தீர்மானிக்க முடியாமல் தவித்து விட்டு என் பக்கமாகத் திரும்பினார்.(என்னையே வாங்கிப் படிக்கலாம் என்பதற்காக அல்ல.)

"ஸார்! பொழுது போக்குவதற்கு ஏதாவது ஒரு கதைப் புத்தகம் கொடுங்கள்" என்றார்.

"ஏன் ஸார், பொழுதைப் போக்கித்தான் ஆக வேண்டுமா? அப்படி அது என்ன குற்றம் செய்தது, உங்கள் வெறுப்பைத் தேடிக்கொள்ள? விரட்டியடித்துப் போக்க வேண்டுமானாலும் அதற்கு ஆயுதமாகக் கதைப் புத்தகம்தான் வேண்டுமா? கட்டுரை, கவிதை......" நான் பேச்சை முடிப்பதற்குள் அவர் அலறிவிட்டார்,

"ஐயையோ கட்டுரையா? வேண்டாம் ஸார்; போரடிக்கும்; கசக்கும்" என்று கண்ணீர் வடிக்கத் தயாரானார்.

அவரிடம் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொடுத்து "இது கதையா கட்டுரையா புரட்டிப்பாருங்கள்" என்றேன்.

அவர் நின்று கொண்டே புரட்ட ஆரம்பித்தார். புரட்டினார்; புரட்டினார். பக்கங்கள் ஒன்று, இரண்டு, ஐந்து, பத்து என்று மாறிக்கொண்டே வந்தன. நின்ற மனிதர் புரட்டிக்கொண்டே பக்கத்திலிருந்த பெஞ்சில் உட்கார்ந்து விட்டார்.

பொங்கல் சமயமானதால் கடை வாசலிலே கரும்பு விற்கிற பையன் "கரும்பு, கரும்பு" என்று கூவினான்.

கட்டுரை கசக்கும் என்ற அன்பரும் கையிலிருந்த புத்தகத்திலிருந்து பார்வையை எடுக்காமலே "ஆமாம்

கரும்பு! கரும்பேதான். கல்கண்டு, தேன்" என்று சொல்லி நாக்கைச் சப்புக்கொட்டிக் கொண்டே, தன் கையில் வைத்திருந்த **"நம் தந்தையர் செய்த விந்தைகள்"** என்ற புத்தகத்தை மேலும் ஆர்வத்துடன் புரட்டலானார்.

அதே சமயம் அந்த அன்பரின் நண்பர் ஒருவர் அங்கு வந்து சேர்ந்தார். "அடடே! நீ இங்கேயா இருக்கிறாய்?" என்று கேட்டார்.

"ஆமாம் இங்கேதான்; அஜந்தா குகைக்குள்ளேதான் இருக்கிறேன். புத்த பகவானுக்கும் யசோதரைக்கும் இராகுலனுக்கும் பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்......" என்றார் கட்டுரைப் பிரியராகிவிட்ட, மாஜிக் கட்டுரை வெறுப்பாளர். வந்த மனிதர் அவர் முதுகில் ஒரு 'சொட்டு' வைத்த பிறகுதான் அவருடைய கனவு கலைந்தது.

எழுதுகிறவர்கள் எழுதினால் "கட்டுரை கரும்பாகத்தான்" இருக்கும். அதுவும் 'கல்கி' அவர்கள் எழுதும் கட்டுரைகள் கற்பகக் கனிரசக் கடலாகவல்லவோ இருக்கும்!

"தாகூர் தரிசனம்" என்னும் இந்தத் தொகுப்பிலே தாகூர் தரிசனம், சுதந்திரத் தலைநகரம், அஜந்தா மார்க்கம், சரபோஜியின் கலைக் கோவில் ஆகிய நான்கு கட்டுரைகள் சேர்ந்திருக்கின்றன. கட்டுரைகள் எவ்வளவு சுவாரஸ்யம் நிரம்பியவையோ, அவ்வளவு விஷயமும் நிரம்பியவை.

சிறுகதைகள் தாகத்தை அடக்கக் குடிக்கும் 'ஸர்பத்'தைப் போன்றவை. சுவையாக எழுதப்படும் கட்டுரைகளோ, நாவுக்கும் ருசித்து உடலுக்கும் சக்தியைக் கொடுக்கக்கூடிய "டானிக்"கைப் போன்றவை.

ஸ்ரீமான் "கல்கி" யவர்களுடைய சுவை நிரம்பிய டானிக்கை, உங்களுக்கு வழங்குவதற்கு நாங்கள் மிகவும் பெருமையடைகிறோம்.

தியாகராயநகரம் }
11—1—54 }

பழ. சிதம்பரன்.
நிர்வாகி, பாரதி பதிப்பகம்.

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

தாகூர் தரிசனம்

அங்க வங்க கலிங்க காஷ்மீர காம்போஜ என்னும் படியான ஐம்பத்தாறு தேசங்களில் வங்க நாடு இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது. வங்கத்துக்கு நமது முன்னோர்கள் எதற்காக இரண்டாவது ஸ்தானத்தைக் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை, ஒரு காலத்தில் வங்கநாடு இரண்டாகப் பிரிக்கப் படப் போகிறது என்பதை ஞானதிருஷ்டியினால் அறிந்து ஐம்பத்தாறு தேசங்களில் வங்க தேசத்தை இரண்டாவதாகச் செய்தார்களோ, என்னமோ? வங்கம், பங்கம், தங்கம் ஆகிய மூன்று சொற்களும் ஒரே பொருளைக் குறிக்கும். வங்க நாட்டார் தங்கள் நாட்டைக் குறித்து மிக்க பெருமையுள்ளவர்கள். 'ஸோனாரே பங்காலா' என்று அடிக்கடி சொல்லிப் பெருமை யடித்துக் கொள்வார்கள். அதாவது, 'தங்க மயமான வங்க நாடு' என்று பொருள். பூமி வளமுள்ள தாயிருந்து நாட்டின் பெயரும் தங்கம் என்று இருந்தால் யாருக்கும் பெருமை ஏற்படுவது இயல்புதானே? அப்படி வங்காளிகள் பேசிப் பெருமை யடித்துக்கொண்டது ஆறாயிரம் மைலுக்கு அப்பால் சென்று ஆங்கிலேயன் காதில் விழுந்தது! வந்துவிட்டான் கப்பல் ஏறி! உலகத்தில் எங்கேயாவது தங்கம் இருந்தால் அது

ஆங்கிலேயனுக்குத்தான் சொந்தம் என்று இங்கிலீஷ் வேதத்திலே எழுதி வைத்திருக்கிறதல்லவா? ஆகவே, ஆங்கிலேயன் இந்தியாவுக்கு வந்ததும் முதன் முதலில் வங்க நாட்டைத்தான் கவர்ந்தான். வங்க நாட்டிலிருந்து ஆங்கிலேயன் கொள்ளை கொண்டுபோன பணத்துக்கு இன்றுவரையில் வட்டிபோட்டுக் கணக்குப் பார்த்தால், தமிழ்க்கணக்கு முறைப்படி கோடி, மகா கோடி, சங்கம், மகா சங்கம், வெள்ளம், மகா வெள்ளம், சமுத்திரம், மகா சமுத்திரம் என்ற கணக்கிலேதான் சொல்ல வேண்டும்.

இப்படியெல்லாம் வங்க நாட்டுப் பொருளைக் கொள்ளை கொண்டுபோன இங்கிலீஷ்காரன் அதற்கெல்லாம் பிராயச்சித்தமாகவும் பரிகாரமாகவும் ஒரு காரியம் செய்தான்.

வங்க தேசத்து மகாகவி ஒருவரை உலகத்துக்கு அறிமுகம் செய்வித்தான். உலகத்துக்கு என்ன? இந்தியாவுக்கும் வங்க நாட்டுக்குமே அறிமுகம் செய்து வைத்தான்.

* * *

டாக்டர் ரவீந்திரநாத தாகூரின் கவிதைகள் சில ஆங்கில பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டு, 'கீதாஞ்சலி' என்ற பெயருடன் புத்தகமாக வெளியிடப் பட்டது. அதற்கு ஸ்வீடன் தேசத்திலே உள்ள ஒரு ஸ்தாபனத்தார் 'நோபெல் பரிசு' என்ற சர்வ தேசீய இலக்கியப் பரிசை அளித்தார்கள். உடனே இந்தியா தேசத்தில் உள்ள படித்த மனிதர்கள் அத்தனை பேரும் விழித்துக்கொண்டார்கள். விழித்துக்

கொண்டு கூர்மையான திருஷ்டியுடன் நோக்கினுர்கள். "ஓஹோ! இங்கே நமது நாட்டில் நமது காலத்தில் ஒரு கவிஞர் இருக்கிருர்! அவர் கவி பாடுகிருர்! கவி, ஐயா, கவி!" என்ற மகத்தான உண்மையைக் கண்டுபிடித்துச் சொன்ஞர்கள். எல்லாரும் "மகாகவி தாகூருக்கு ஜே!" என்று கோஷமிட்டார்கள்.

டாக்டர் ரவீந்திரநாத தாகூர் எவ்வளவு பெரிய மகா கவியா யிருக்கட்டும்; மகா மேதாவியாயிருக்கட்டும்; மெத்த படித்தவராகவும் இருக்கட்டும். ஆனுலும் அவரைவிட நான் அதிகம் தெரிந்தவன் என்று சொன்ஞல் நீங்கள் ஒரு வேளை நம்பமாட்டீர்கள். ('நம்ப மாட்டோம்' என்று தயவு செய்து சொல்லுங்கள். அப்படிச் சொல்லாவிட்டால் கட்டுரை மேலே நகராது, ஸார்!) ஆமாம்; நீங்கள் நம்பத்தான் மாட்டீர்கள். "டாக்டர் தாகூர் எவ்வளவு பெரியவர்? இந்த மனிதன் எவ்வளவு சின்னவன்? அவருடைய தாடியில் நாலில் ஒரு பங்கு நீளமுள்ள தாடியாவது இவனிடம் இருக்கிறதா? அவரைவிட இவனுக்கு அதிகம் தெரிவது எப்படி?" என்று நீங்கள் கேட்பீர்கள். தெரியும், ஐயா, தெரியும்! கட்டாயம் அப்படித்தான் கேட்பீர்கள். இருந்தபோதிலும், டாக்டர் தாகூரைவிட நான் அதிகம் தெரிந்தவன் என்று உங்களுக்கு இந்த நிமிஷத்தில் இரண்டே வாக்கியங்களில் நிரூபித்து விடுகிறேன். கேளுங்கள்:

டாக்டர் ரவீந்திரநாத தாகூருக்கு என்னைத் தெரியாது.

எனக்கோ டாக்டர் ரவீந்திரநாத தாகூரைத் தெரியும்.

ஆகவே, டாக்டர் தாகூரைவிட நான் அதிகமாகத் தெரிந்தவன்தானே ? உண்மையா இல்லையா ?

2

திருச்சி நேஷனல் ஹைஸ்கூலில் நான் ஐந்தாவது பாரமோ, நாலாவது பாரமோ வாசித்துக்கொண்டிருந்த போது, டாக்டர் ரவீந்திரநாதர் அந்நகருக்கு விஜயம் செய்தார் !—நோபெல் பரிசு பெற்ற பிறகுதான். அதற்கு முன்னாலே யென்றால் வெறுமனே வந்துவிட்டு போயிருப்பார். நோபெல் பரிசு பெற்ற பின்னராதலால், 'விஜயம் செய்தார் !' விஜயம் செய்த வங்க நாட்டு மகா கவிக்கு உபசரிப்புகள் பலமாக நடைபெற்றன. ஒரு நாள் மாலை தாகூர் உபந்நியாசம் செய்வார் என்றும், அதைக் கேட்பதற்கு ஐந்து ரூபாய் டிக்கட் என்றும் விளம்பரம் செய்திருந்தார்கள். எப்படியாவது மகா கவி தாகூரைப் பார்த்துவிட வேண்டும் என்றும், அவருடைய உபந்நியாசத்தையும் கேட்டுவிட வேண்டு மென்றும் தீர்மானித்தேன். டிக்கட்டுக்கு ஐந்து ரூபாய்க்கு என்ன செய்வது ?—செய்வது என்ன ? திருட வேண்டியதுதான் ! மற்றவர்களிடமிருந்து திருட முடியாதபடியால் என்னுடைய பிரத்தியேகச் செலவுக்கு என்று வீட்டிலிருந்து வந்திருந்த பணத்தில் ஐந்து ரூபாயைத் திருடித் தொலைத்தேன் ! டிக்கட் வாங்கிக் கொண்டு ஹாலுக்குள் பிரவேசித்தேன்.

ரவீந்திரர் எந்த வழியாக அந்த மண்டபத்தில் பிரவேசித்துப் பிரசங்க மேடைக்குச் செல்வார் என்று

விசாரித்துத் தெரிந்துகொண்டு அந்த வழியை ஓட்டிஞற்போல் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன்.

நான் ஏமாந்து போகவில்லை. அந்த வழியாகவே சற்று நேரத்துக்கெல்லாம் டாக்டர் தாகூர் முன்னும் பின்னும் உள்ளூர்ப் பிரமுகர்கள் புடை சூழ மேடைக்குச் சென்ருர். தாகூர் என் பக்கமாகச் சென்ற போது அவர் உடுத்தியிருந்த வெண்பட்டு வஸ்திரத்தைத் தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டேன். அடடா! என்ன பளபளப்பு! என்ன வழுவழுப்பு! வெண்பட்டைப் பற்றித்தான் சொல்கிறேன்! அன்று ஐந்து ரூபாய் கொடுத்து தாகூரின் பிரசங்கம் கேட்கச் சென்றதில் நான் அடைந்த பலன் அவ்வளவுதான். ஏனெனில் தாகூர் தாம் எழுதிக்கொண்டு வந்திருந்த பிரசங்கத்தை மிக மெல்லிய குரலில் படித்தார். அது காதில் விழுவேயில்லை. விழுந்தாலும் எனக்கு விளங்கியிராது. ஏனெனில் மேடைக்கு மிக அருகில் வீற்றிருந்தவர்களின் திரு முகங்களைப் பார்த்தேன். எல்லா முகங்களும் சித்திரத்தில் எழுதிய செந் தாமரைகளைப்போலத் தோற்றமளித்தன. ஒருவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை யென்பது எனக்கு நன்ருய் விளங்கிவிட்டது. ஆகவே நான் ஏமாற்றம் அடைய வில்லை.

* * *

பிற்பாடு டாக்டர் தாகூரின் வெண்பட்டு வஸ்திரத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டதின் பலஞகத்தாஞே என்னமோ, அவருடைய

கவிதைகளைப் படிக்கவேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டாயிற்று. ‘ கீதாஞ்சலி ’ ‘ கார்டனர் ’ முதலிய நூல்களையும், ‘ ஹங்க்ரி ஸ்டோன்ஸ் ’ முதலிய சிறு கதைகளையும் படிக்கத் தொடங்கினேன். படிக்கப் படிக்க அவற்றின்மீது மோகமே உண்டாகிவிட்டது. தாகூரின் கவிதையிலும் வசனத்திலும் ஒரு தனிப்பட்ட சுகம் காணப்பட்டது. வெண்பட்டைத் தொடும்போது கரத்துக்கு ஏற்படும் சுகம் மனதிற்கு ஏற்பட்டது. கவிகளில் ஏதோ அங்குமிங்கும் கொஞ்சம் பொருள் விளங்கவும் செய்தது. விளங்கிய வரையில் லாபந் தானே ? நஷ்டம் ஒன்றும் இல்லையல்லவா ?

* * *

தேசியப் புயலானது என்னை தாகூரின் கவிதை மோகத்திலிருந்து சிறிது காலம் கவர்ந்திருந்தது. ஆயினும் தாகூரிடம் இருந்த பக்தி குன்றவில்லை. இருபது வருஷத்துக்கு முன்னால் டில்லியில் நடந்த விசேஷ காங்கிரஸுக்குப் போய்விட்டுத் திரும்பும்போது கல்கத்தாவுக்கு வந்தேன். கையிலே பணம் ரொம்பக் குறைவாகத்தான் இருந்தது. ஆனாலும், கல்கத்தா வரையில் வந்துவிட்டுச் சாந்தினிகேதனம் சென்று தாகூரைத் தரிசியாமல் போவதா என்று ஆத்திரமாயிருந்தது. கடைசியில் இரண்டு நண்பர்களோடு அந்தப் புண்ணிய ஸ்தலத்துக்குச் சென்றேன். இரண்டு தினங்கள் அவ்விடத்தில் தங்கியிருந்தோம். அப்போது பௌர்ணமி. இரவைப் பட்டப்பகலாக்கிய வெண்ணிலாவில், சாந்தினிகேதனத்துக் குறுக்குச் சாலைகளில், மாணவர்களும் மாணவிகளும் தாகூரின் வங்காளி

கீதங்களைப் பாடிக்கொண்டு அங்குமிங்கும் உலாவிய காட்சி இன்னும் என் கண் முன்னல் நிற்கிறது. 'ஞான ரதம்' என்ற நூலில் மகாகவி பாரதியார் வர்ணித்திருக்கும் கந்தர்வ பூமியாகவே சாந்தினிகேதனம் எனக்கு அப்போது தோற்றம் அளித்தது.

பகல் நேரத்தில் விருட்சங்களின் குளிர்ந்த நிழலில் ஒரு ஆசிரியரைச் சுற்றிப் பத்து பதினைந்து மாணவர்கள் உட்கார்ந்து பாடம் கேட்ட காட்சிகளையும் சாந்தினி கேதனத்தில் கண்டோம். அது பண்டைக் காலத்து நாலந்தா, தக்ஷசீலம் முதலிய குருகுலங்களை எங்களுக்கு ஞாபகப்படுத்தியது. பிரார்த்தனை நேரத்தின்போது தாகூரையும் தரிசனம் செய்தோம். அரண்யத்தின் மத்தியிலுள்ள குருகுலத்தலைவரான மகரிஷியைப் போலவே அவர் இருந்தார். டாக்டர் தாகூரின் கவிதையைப் படித்ததினுல் அவர் மேல் ஏற்பட்ட பக்தி அவருடைய குருகுலத்தைப் பார்த்த பிறகு பன்மடங்காயிற்று.

சாந்தினிகேதனத்தில் நாங்கள் தங்கியிருந்தபோது நேர்ந்த இன்னொரு அரிய சம்பவம் என் மனதை விட்டு அகல்வதே யில்லை. தாகூரின் பரம பக்தரில் ஒருவரான தீனபந்து ஆண்ட்ரூஸ் அப்போது அங்கே தங்கியிருந்தார். ஒருசமயம் நாங்கள் சாந்தினி கேதனத்துக்குக் குறுக்குச் சாலை ஒன்றில் போய்க் கொண்டிருந்தபோது ஆண்ட்ரூஸ் எதிர்ப்பட்டார். எங்களைச் சிறிது கூர்ந்து பார்த்தார். "நீங்கள் எந்த மாகாணத்தவர்?" என்று கேட்டார். "மதருஸிலிருந்து

வருகிறோம்!'' என்று பதில் சொன்னோம். உடனே, ஆண்ட்ரூஸ், “ஆஹா! இராஜகோபாலாச்சாரியார் பிறந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்களா நீங்கள்?'' என்று சொல்லிக்கொண்டே எங்கள் மூன்று பேரையும் ஒவ்வொருவராகத் தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டார். இப்படி முகமன் கூறும் முறை வட நாட்டில் சாதாரணம். எனக்கு அந்த முறை பழக்க மில்லையாதலால் ஆண்ட்ரூஸின் ஆலிங்கனம் கொஞ்சம் சங்கடமாகத்தான் இருந்தது. ஆயினும், “இராஜ கோபாலாச்சாரியார் மீது இவருக்கு எவ்வளவு மரியாதை!'' என்ற எண்ணம் ஆழ்ந்து பதிந்தது.

3

இருபது வருஷத்திற்குப் பிறகு மறுபடியும் சென்ற 1947-ம் ஆண்டில் சாந்தினிகேதனத்துக்கு யாத்திரை செல்லும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இதற்கு மூல காரணமானவர் ஆண்ட்ரூஸ் அன்று குறிப்பிட்ட ராஜாஜிதான் என்பது ஒரு விந்தையான விஷயம். ராஜாஜி மத்திய அரசாங்கத்தில் இரண்டு மாதம் கல்வி மந்திரியாயிருந்தபோது ஒருதடவை சாந்தினி கேதனத்துக்குச் சென்றிருந்தார். அங்கே ஐந்து லட்சம் ரூபாய் செலவில் **சீன பவனம்** கட்டப்பட்டிருப்பதைப் பார்த்தார். இன்னும் ஹிந்தி பவனம், மகாராஷ்டிர பவனம் முதலியவை இருப்பதையும் கண்டார். ஓரியா பாஷை ஆசிரியர் ஒருவரும், ஓரியா பாஷைப் புத்தகங்களும் இருப்பதைக் கவனித்தார். ஆனால், தமிழ்ப் புத்தகம்

என்பது பெயருக்குக்கூட அங்கேயில்லை. தமிழ் மாணுக்கர்கள் சிலர் இருந்தார்கள். ஆனால், தமிழ் படிப்பதற்கு எவ்வித வசதியும் இல்லை. சர்வ தேசங்களிலும் உள்ள அறிவாளிகளின் கவனத்தைக் கவர்ந்த இந்த மகத்தான ஸ்தாபனத்தில் தமிழும் இடம்பெற வேண்டும் என்று ராஜாஜியின் உள்ளத்தில் தோன்றியது. அதே சமயத்தில் அதிர்ஷ்ட வசத்தினால் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரும் ராஜாஜியின் நினைவில் தோன்றினார். " ஆதி காலத்திலிருந்து இன்றுவரை வெளியான நல்ல தமிழ் நூல்களை சுமார் ஆயிரத்துக்குக் குறையாமல் வாங்கி அனுப்ப வேண்டும் '' என்று ராஜா சர் அவர்களுக்கு ராஜாஜி கடிதம் எழுதினார். அத்துடன் மேற்படி புத்தகங்களை ரஸிகமணி டி. கே. சி. அவர்களுடன் நானும் சென்று சாந்தினிகேதனத்தில் கொடுத்து விட்டு வர வேண்டுமெனக் கட்டளை அனுப்பினார்.

முற்பிறப்பில் செய்த புண்ணியத்தின் பயனாக இந்தப் புனித யாத்திரைக்கு ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தில் நாள் குறிப்பிடப்பட்டது. (அந்த மாதம் 15உ ராஜாஜி கல்கத்தா கவர்னராக வரப்போகிறார் என்ற விவரம் யாருக்குமே அப்போது தெரியாது.) ஆகஸ்டு 8உ மகாகவி தாகூர் சமாதியடைந்த தினம். அந்தப் புண்ணிய தினத்தில் தமிழ்ப் புத்தகங்களைச் சமர்ப்பிக்கும் விழாவை நடத்தினால் நன்றாயிருக்கும் என்று விசுவபாரதி நிர்வாகிகள் தெரிவித்திருந்தார்கள். பழம் நழுவிப் பாலில் விழுந்தது என்று நான் நினைத்துக் கொண்டேன்.

ராஜாஜியின் கடிதங் கண்டதும் ராஜா ஸர் அவர்கள் வெகு உற்சாகமாக அதற்கு இணங்கினார்கள். உடனே தமிழ் நூல்கள் வாங்கிச் சேர்க்கும்படி தமிழ்ப் பண்ணைக்கு உத்தரவு அனுப்பினார்கள்.

ரஸிகமணியோ தாகூரின் மகா பக்தர். கம்பருக்கும் வள்ளுவருக்கும் மாணிக்க வாசகருக்கும் அடுத்தபடியாக ரஸிகமணி பக்தியோடு பெயரை உச்சரிக்கும் கவிஞர் தாகூர் ஒருவர்தான். எனவே உடல் நிலை திருப்திகரமா யில்லாவிட்டாலும் ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அந்த நீண்ட யாத்திரைக்குச் சம்மதித்தார். பிரயாணத்துக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

* * *

புறப்பட நாள் குறிப்பிட்டிருந்த அன்று காலையில் எதிர்பாராத சங்கடம் ஒன்று குறுக்கிட்டது. அன்று அதிகாலையில் நான் பாதி கண்விழித்து எழுந்திருக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, கீழேயிருந்து 'டக்டக்' என்ற கைத்தடிச் சத்தத்துடன் ஒருவர் மச்சுப்படி ஏறிவரும் சத்தம் கேட்டது. வந்தவர் ரஸிகமணி அவர்கள்தான். அவசரமாக நான் எழுந்தேன். ஆனால் அவர் என் படுக்கையில் உட்கார்ந்து கொண்டு, "ஒரு சமாசாரம்; சொல்லத் தயக்கமாக இருக்கிறது; உடம்பு சரியாகவே இல்லை. படுக்கையிலிருந்து எழுந் திருக்கும்போதே தலை சுற்றி மயக்கம் வந்தது. இந்த நிலையில் நான் எங்கே கல்கத்தாவுக்குப் பிரயாணப் படுவது? ஒன்றும் புரியவில்லை!" என்றார். எனக்கும் உடனே தலை சுற்றி மயக்கம் வரும் போலிருந்தது.

மெதுவாகச் சமாளித்துக் கொண்டு, " அதற்கென்ன பார்த்துக் கொள்வோம். உடம்பு சரியில்லையென்றால், பிரயாணத்தை ரத்து செய்துவிட்டால் போகிறது !" என்றேன்.

இருவரும் கீழே இறங்கினோம். பிரயாணத்தை ரத்து செய்வதால் ஏற்படக்கூடிய சங்கடங்களை நினைக்கும்போது ஒரே பதை பதைப்பாய் இருந்தது. கல்கத்தாத் தமிழர்கள் வேறு ரஸிகமணி அவர்களின் வரவை எதிர்பார்த்துத் தடபுடலான ஏற்பாடுகள் செய்திருந்தார்கள்.

இங்கேயோ, எங்களுடன் வரவிருந்த ஸ்ரீ சின்ன அண்ணாமலை பிரமாத தடபுடல் படுத்தினார். "டி.கே.சி. யினால் வர முடியாவிட்டால் போகட்டும்; நான்தான் டி. கே. சி. என்று சொல்லிக்கொண்டு வந்துவிடுகிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாம் போகலாம்" என்றார்.

மேலும் "டி. கே. சி. யைப் போலவே நான் பாட்டுப் படிக்கிறேனா, இல்லையா, பாருங்கள் !

அரவம் கரந்ததோ ?........."

என்று பாடல் சொல்லவும் ஆரம்பித்து விட்டார்.

நண்பர் சதாசிவத்தின் முன் யோசனையினால் ஸ்ரீ டி. கே. சி. யின் உருவப்படம் கல்கத்தாப் பத்திரிகைகளில் அந்த வாரம் பிரசுரமாகியிருந்தது. இதை நான் எடுத்துச் சொன்னபோது, " இது என்ன பிரமாதம் ? நான் ஒரு மீசை சம்பாதித்துக் கட்டிக்கொண்டு வந்து விடுகிறேன் ! அப்புறம் நான் டி. கே. சி. இல்லையென்று

யார் சொல்லமுடியும்?" என்றார் ஸ்ரீசின்ன அண்ணாமலை. தாம் ஆகாசவிமானத்தில் ஏறும் காட்சியைப் பார்ப்பதற்காக அவருடைய அண்ணாச்சி அநுமாரை விமான நிலையத்துக்கு வரும்படி சொல்லி யிருந்தாராம். ஆகையால் அன்றைக்குத் தாம் ஆகாசவிமானத்தில் ஏறித்தான் ஆகவேண்டும் என்று ஸ்ரீ அண்ணாமலை பிடிவாதம் செய்தார்.

இதற்கிடையில் மகா ராஜன் பால்காரன் வந்து சேர்ந்தான். பாலைக் கறந்து கொடுத்தான். காப்பியின் மணம் காற்றில் வந்தது. காப்பியைச் சாப்பிட்டதும் ரஸிகமணிக்குக் கொஞ்சம் உற்சாகம் வந்தது. "புறப்படலாம் போலத் தோன்றுகிறதே" என்றார்.

அச்சமயம் டாக்டர் வேறு வந்துவிட்டார். "உடம்பெல்லாம் சரியாய்த் தானிருக்கிறது; புறப்படலாம்!" என்றார் டாக்டர். "அதென்ன ? பார்க்காமலே சொல்கிறீர்களே ?" என்றேன். "எல்லாம் பார்த்தாய் விட்டதே !" என்றார் டாக்டர். விஷயம் ஒன்றும் புரியவில்லை.

பிறகு, விசாரித்ததில் ஸ்ரீ சின்ன அண்ணாமலை டாக்டரையும் வழிமறித்துத் தம் உடம்பைப் பரிசோதிக்கச் சொல்லி அத்தாட்சி வாக்கிக் கொண்டதாகத் தெரிந்தது.

இதனாலெல்லாம் ஏற்பட்ட சிரிப்பிலும் கொம்மாளத்திலும் ரஸிகமணிக்கு உண்மையிலேயே உடம்பு குணமாகி விட்டது. அவரையும் டாக்டர் பரிசோதித்து "யாத்திரைக்கு யோக்கியம்" என்று சொல்லி விட்டார்.

4

காலை ஒன்பது மணிக்கு மீனம்பாக்கத்திலிருந்து விமானம் புறப்பட்டது. (எங்களை ஏற்றிக்கொண்டு தான்.) விமானத்தில் பறக்கும்போது உண்மையில் எங்களுக்கு இறகு முளைத்து வானுலக தேவர்களைப் போல் ஆகாசமார்க்கத்தில் பறப்பதுபோலவே எண்ணிக் கொண்டோம். இத்தகைய குதூகல உணர்ச்சிக்குக் காரணம், விமான நிலையத்தில் கிடைத்த பத்திரிகைகளில் நாங்கள் பார்த்த ஒரு செய்திதான். அதாவது ராஜாஜி ஆகஸ்டு 15உ மேற்கு வங்காளத்தின் 'மேன்மை தங்கிய கவர்னர்' ஆகிறார் என்பது. ராஜாஜி கவர்னர் ஆகப்போகின்றதாக நாங்கள் சந்தோஷப்பட்டு விடவில்லை. அதைப் பற்றிக் கவலைதான் கொண்டோம். ஆனால் கல்கத்தா போகிறது போகிறோம். ராஜாஜியைப் பார்த்துவிட்டு வர ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என்று மகிழ்ச்சி அடைந்தோம்.

ஆனால் அதிகமாகச் சந்தோஷப்பட நேரம் கிடைக்கவில்லை. காலை ஒன்பது மணிக்குச் சென்னையில் கிளம்பிய விமானம் மத்தியானம் மூன்று மணிக்குக் கல்கத்தா டம் டம் விமான நிலையத்தில் வந்து இறங்கியது. "கத்தி போச்சு வால் வந்தது டம் டம்!" என்று கதை சொல்வதைப் போல், அவ்வளவு சர்வ சுலபமாக, 'சென்னை போச்சு கல்கத்தா வந்தது, டம் டம்!'

விமானத்திலிருந்து இறங்கி டம் டம் கிராமத்தின் வழியாகவும் இன்னும் பல கிராமங்களின் வழியாகவும்

சுமார் பதினைந்து மைல் மோட்டார் பஸ்ஸில் போய்க் கல்கத்தா நகரைக் கண்டு பிடித்தோம்; எங்களையும் கல்கத்தா தமிழன்பர்கள் கண்டு பிடித்து விட்டார்கள். அவர்களுடைய அன்பாகிய பெரு வெள்ளத்தில் இரண்டு மூன்று தினங்கள் கிடந்து தத்தளித்த பிறகு மெதுவாக அந்த வெள்ளத்தை நீந்திக் கடந்து போல்பூர் ஸ்டேஷனுக்கு டிக்கட் வாங்கிக் கொண்டு ரயில் ஏறினோம்.

*   *   *

கல்கத்தாவிலிருந்து சுமார் நூறு மைல் தூரத்தில் போல்பூர் ஸ்டேஷன் இருக்கிறது. போல்பூர் ஸ்டேஷனிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் விசுவபாரதி— சாந்தினிகேதனம் என்னும் உலகப் பிரசித்தி பெற்ற கல்வி ஸ்தாபனங்கள் இருக்கின்றன.

ரயிலில் போகும்போது இருபுறமும் எதிர்ப்பட்ட காட்சிகள் எல்லாம் பெரும்பாலும் சோழநாட்டு மருத நிலக் காட்சிகள் போலவே இருந்தன. கண்ணுக்கெட்டிய தூரம் பசுமையான நெற்பயிர் அடர்ந்த நன்செய் வயல்கள்; இடையிடையே வாய்க்கால்கள்; நீர்த் தேக்கங்கள்; தென்னஞ் சோலைகள்; வாழைத்தோப்புகள்; செந்தாழைப் புதர்கள்; இவற்றினிடையே ஓட்டு வீடுகளும் கூரை வீடுகளும் உள்ள கிராமங்கள் காணப்பட்டன. ஒன்றே ஒன்று மட்டும் குறைவாய் இருந்தது. அதாவது தமிழ் நாட்டில், முக்கியமாகச் சோழ நாட்டில், காணப்படுவதுபோலக் கோயில்கள் மட்டும் இல்லை. ஒரு கோயில் கூடக் காணப்படவில்லை. கோயில், கோபுரம்,

விமானம், ஸ்தூபி, மண்டபம், அல்லது விழுந்த மண்டபத்தின் தூண்—ஒன்றுகூடக் கிடையாது.

"ஏன் கோயில் இல்லை?" என்று சின்ன அண்ணாமலை கேட்டுக்கொண்டே வந்தார். "கோயிலில் குடியிருக்கவேண்டிய கடவுளுக்கே அதைப்பற்றிக் கவலை இல்லை. நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்றேன். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று மனிதர்களுக்கும் சொல்லியிருக்கிறதே!" என்றார் அவர். "அந்தத் தமிழ் மொழி இன்னும் இவ்வளவு தூரம் பிரயாணம் செய்யவில்லை" என்று சொல்லி வைத்தேன்.

*　　　*　　　*

போல்பூர் ஸ்டேஷன் வந்துவிட்டது. ரயிலடியில் ரஸிக மணியை வரவேற்பதற்குச் சாந்தினிகேதனத்து மனிதர்கள் சிலர் காத்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் கையில் அழகான சீனக்குடை ஒன்று வைத்திருந்தார். அவரைப் பார்த்தால் மலையாளி மாதிரி இருந்தது. இன்னும் இரண்டு வங்காளிகளும் வந்திருந்தார்கள். வங்காளிகள் ஆங்கிலத்திலும், மலையாள நண்பர் தமிழிலும் ரஸிகமணியை வரவேற்றார்கள். எனக்கு ஒரே அதிசயம். அந்த மலையாளியிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தேன். அவர் தாம் விசுவபாரதி **சீனபவன**த்தில் வேலையில் இருப்பதாகச் சொன்னார். தமிழ் நாட்டு விவகாரங்கள் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டிருந்தார். பல பாஷைகள் அறிந்தவர் என்றும் தெரிந்தது. அவ்வளவு ஏன்? நாங்கள் அங்கே வந்து சேர்ந்ததற்கு

மூலகாரணமாக விஷமம் செய்தவர் அந்த மனிதர்தான் என்று தெரிந்தது. அவருடன் பழக்கமாகி அரை மணிக்குள்ளே விசுவபாரதியில் **தமிழ் பவனம்** ஏற்படுத்த வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார். "எல்லா ஏற்பாடுகளையும் என்னிடம் விட்டு விடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். தமிழ் பவனத்திட்டம் தயார் செய்து வைக்கிறேன்!" என்று கூறி என்னைத் திடுக்கிடப் பண்ணினர். இந்த மலையாள நண்பருடைய பெயர் ஸ்ரீ வி. ஜி. நாயர். மொத்தத்தில் ஒண்ணுங் கிளாஸ் மனுஷர்.

போல்பூர் ஸ்டேஷனிலிருந்து சாந்திநிகேதனம் இரண்டே இரண்டு மைல்தான். இந்த இரண்டு மைல் சாலையைக் காரில் கடக்க அரை மணிக்கு மேலாயிற்று. பெரிய பெரிய குழிகள், குட்டைகள், குளங்கள், ஏரிகள், பாதாளக் கிணறுகள் எல்லாம் அந்தச் சாலையிலேயே இருந்தன. அன்றுவரை நடந்துகொண்டிருந்த ஷுராவர்த்தி சாகிபுவின் இராஜ்ய நிர்வாகத்தைப்போல் அந்தச் சாலையும் இருந்தது. "இந்த இரண்டு மைல் சாலையை ரிப்பேர் செய்ய முடியாதா?" என்று கேட்டதற்கு "ஆ! இப்போது வங்காளம் அடைந்திருக்கும் துர்க்கதியில் சாலை ரிப்பேரை யார் கவனிக்கப் போகிறார்கள்?" என்று பதில் வந்தது. (எட்டயபுரம் விழாவுக்காக எட்டு மைல் சாலையைச் செப்பனிட்டுத் தந்த நமது மராமத்து மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலத்தை இந்தக் கட்டத்தில் ஒரு முறை நினைத்து நன்றி செலுத்துகிறேன்.)

5

சாந்தினிகேதனத்தை அடைந்து எங்களுக்கு ஏற்படுத்தியிருந்த விடுதியின் வாசலில் இறங்கியதும் என்னை நான் தொட்டுப் பார்த்துக்கொண்டு ரஸிகமணி அவர்களையும் தொட்டுப் பார்த்துத் திருப்தியடைந்தேன். எலும்புகள் ஒன்றும் முறிந்துவிடவில்லை என்ற திருப்திதான்.

ஜாகை வசதி, சாப்பாடு வசதி எல்லாம் குறைவின்றி இருந்தன. ஸ்ரீ வி. ஜி. நாயர் அடிக்கடி வந்து எங்களைக் கவனித்துக் கொண்டார். (ஆனால் சீன நாட்டுச் சித்திரக் குடையை மட்டும் பிறகு அவர் எடுத்து வரவில்லை. அதை நான் ஆசையோடு அடிக்கடி கடைக்கண்ணால் பார்த்ததைக் கவனித்துவிட்டார் போலும்! ஆகா! இதெல்லாம் மலையாளிகளுக்குச் சொல்லிக் கொடுக்கவா வேணும்?) அப்புறம் ஸ்ரீ பெருமாள் என்னும் இளைஞர் ஒருவரும் அடிக்கடி வந்து எங்களைக் கவனித்துக் கொண்டார். ஸ்ரீ பெருமாள் தமிழ் நாட்டவர்; மதுரை ஜில்லா உத்தம பாளையத்தைச் சேர்ந்தவர். சாந்தினி கேதனத்தின் கலாபவனத்தில் மாணவராகி ஸ்ரீ நந்தலால் போஸ் அவர்களிடம் சித்திரக்கலை பயின்றவர்; இப்போது அந்தக் கலாபவனத்திலேயே உதவி ஆசிரியராயிருந்து பணி ஆற்றி வருகிறார். தங்கமான குணம் படைத்த பிள்ளை. ஸ்ரீ பெருமாள் மாணவராயிருந்த காலத்தில் பல தமிழ் மாணாக்கர்கள் சாந்தினிகேதனத்தில் இருந்தார்கள். ஒருசமயம் இருபது முப்பது பேர் வரையில் இருந்தார்களாம். இப்போது மூன்று நாலு

மாணுக்கர்கள்தான் இருக்கிறார்கள். "இந்தக் காலத்தில் தமிழ் நாட்டில் தமிழ் உணர்ச்சி அதிகம் பரவியிருக்கிறது. இங்கே தமிழ் படிக்க வசதியே கிடையாது. ஆகையினாலே தான் தமிழ் நாட்டு மாணுக்கர் அதிகம் பேர் இப்போது வருவதில்லை" என்று தமிழ் பேசுவதற்கு ஏங்கிப் போயிருந்த ஸ்ரீ பெருமாள் சொன்னார். விசுவபாரதியில் தமிழ்ப் புத்தகசாலை வேண்டும் என்பதும், தமிழ்ப் புத்தகசாலை **தமிழ்ப் பவன**மாக வளரவேண்டும் என்பதும், ஸ்ரீ பெருமாளின் கனவுகள்; முதற் கனவு நிறைவேறியதில் அவருக்குப் பரம சந்தோஷம். எனவே, ரஸிகமணி கோஷ்டியை அவர் ரொம்பவும் விசாரித்துக் கொண்டதில் வியப்பில்லையல்லவா?

* * *

அன்று மாலையில் டாக்டர் ரவீந்திரநாத தாகூர் வசித்திருந்த பிரதான மாளிகையின் தாழ்வாரத்தில் தமிழ் நாட்டு விருந்தாளிகளுக்கு ஒரு சிற்றுண்டி விருந்து நடந்தது. டாக்டர் தாகூரின் ஏக புதல்வரும் விசுவபாரதியின் முக்கிய நிர்வாகியுமான ஸ்ரீ ரதீந்திரநாத தாகூர் மேற்படி சிற்றுண்டி விருந்தை அளித்தார். ஸ்ரீ ரதீந்திரர் தமது புகழ் பெற்ற தந்தையாரைப் போலவே ஆஜானுபாகுவான கம்பீர புருஷராய் முகத்தில் தேஜஸ் ஒளிவிட்டுப் பிரகாசிக்க விளங்குகிறார். தந்தையாரின் சிருஷ்டியான சாந்திநிகேதனத்தைச் சரிவர நடத்துவதைத் தமது வாழ்க்கையின் ஒரே இலட்சியமாகக் கொண்டிருக்கிறார். தம்முடைய சொந்தச் சந்தோஷ அனுபவத்துக்கென்று அவர் வைத்துக் கொண்டிருக்கும் காரியம் தச்சுவேலை. இவருடைய

பிரத்யேக அறையில் உளி, சுத்தி, ரம்பம், வாள் முதலிய பல தச்சுவேலைக் கருவிகளும், அவருடைய கையினுல் செய்து முடித்த பற்பல சிறு பொம்மைகள், பெட்டிகள், சட்டங்கள், முதலியனவும் நிறைந் திருக்கின்றன.

ஸ்ரீ ரதீந்திர நாதரைத் தவிர, விசுவபாரதியின் தலைமைப் பேராசிரியர் ஸ்ரீ க்ஷிதி மோகன் ஸென், கலா பவனத் தலைவர் ஸ்ரீ நந்தலால் போஸ் ஆகியவர் களையும் மேற்படி விருந்தில் அறிமுகம் செய்து கொண்டோம்.

விருந்து முடிந்த பிறகு, ரவீந்திரர் வசித்த மாளிகையைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினோம். அடடா! விதவிதமான செடிகளும் கொடிகளும் கொடி மண்டபங்களும் நீர் ஓடைகளும் ஓடைகளில் மலர்ந்த அல்லிகளும் குமுதங்களும், இடையிடையே உட்கார்ந்து பார்த்து அநுபவிக்க இயற்கையாக அமைந்த மேடைகளும் பார்க்கப் பதினுயிரம் கண்கள் வேண்டும்;—பார்த்து அநுபவிக்கப் பல ஜன்மங்கள் வேண்டும் என்று சொல்லும்படியிருந்தன.

இன்னும் கொஞ்சம் அப்பால் இப்பால் சென்று ஆங்காங்கே கட்டியிருந்த பெருங் கட்டிடங்கள், சிறு வீடுகள், மண் குடில்கள் முதலியவற்றையும் பார்த்து விட்டு வந்தோம். வீடானுலும் குடிசையானுலும் சுற்றிலும் பசுமையான செடி கொடிகள் இல்லாமல் எதுவும் கிடையாது.

நடுநடுவே கண்களைப் பறிக்கும் வர்ண விசித்திரமான மலர்களும் மலர்க் கொத்துகளும் விளங்கின. நாலா புறமும் நறுமணத்தை வாரி இறைத்த புஷ்ப சாதிகளும் இருந்தன.

இதையெல்லாம் பார்த்துவிட்டு எங்கள் விடுதியில் வந்து உட்கார்ந்ததும் ஸ்ரீ சின்ன அண்ணாமலை ஒரு பெரிய நெடுமூச்சு விட்டு மிகப் பரிதாபமாக என்னைப் பார்த்தார்: காரணம் கேட்டதற்கு, "போயும் போயும் எட்டயபுரத்துக் கரிசல் காட்டிலே போய் நீரும் பாரதி ஞாபகார்த்த மண்டபம் கட்டுகிறீரே! ஒரு கவிஞருக்கு ஞாபகார்த்தம் அமைப்பதாயிருந்தால் இம்மாதிரி அழகான இடத்திலேயல்லவா அமைக்கவேண்டும்?" என்றார்.

"ஓகோ! உமக்குத் தெரியாது போலிருக்கிறது! இந்தப் பிரதேசம் ஒரு காலத்தில் எட்டயபுரத்துக் கரிசல் காட்டை விடப் பெரிய பொட்டல் காடாக இருந்தது. டாக்டர் தாகூர் ஒரு கோடி ரூபாய் சம்பாதித்து வந்து இந்தப் பொட்டல் காட்டிலே கொட்டியதால் அல்லவா இப்போது இவ்வளவு அழகிய காட்சி அளிக்கிறது? ஒரு கோடி ரூபாய் கொட்டியும் போதாமல், காந்தி மகாத்மா கடைசியாக இங்கே வந்திருந்தபோது டாக்டர் தாகூர் தமது முதிர்ந்த தள்ளாத பிராயத்தில் 'பணம் போதவில்லையே!' என்று கண்ணீர் விட்டாராம்! அதெல்லாம் உமக்குத் தெரியுமா?" என்றேன்.

டாக்டர் ரவீந்திரநாதர் வங்காளத்தில் பெரியதொரு ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்தவர். தாகூரின் தகப்பனுர் ஸ்ரீ தேவேந்திர நாத தாகூர் ஒரு சமயம் தமது ஜமீனைப் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார். வழியிலே, இப்போது சாந்தினிகேதனம் உள்ள பிரதேசத்தைக் கடக்கும்படி நேர்ந்தது. அங்கே நெடுந்தூரத்திற்கு நெடுந்தூரம் வெட்ட வெளியா யிருப்பதையும் நாலாபுறமும் வானம் வந்து பூமியைத் தொடுவதையும் ஸ்ரீ தேவேந்திரநாத தாகூர் பார்த்தார். அந்தக் காட்சி அவருக்கு அகண்டாகரமான ஆண்டவனுடைய சொரூபத்தை நினைவூட்டியது. அந்த பெரிய பொட்டல் வெளியில் தவறிப்போய் ஒரே ஒரு மரம் தனித்து நிற்கக் கண்டார். அதனடியில் உட்கார்ந்து நிஷ்டையில் அமர்ந்தார். இதற்குப் பிறகு ஸ்ரீ தேவேந்திரர் அடிக்கடி அந்தப் பிரதேசத்துக்கு வந்து எல்லையற்ற இறைவனுடைய இயல்பைப் பற்றி நினைத்து அந்த மரத்தினடியில் தியானத்தில் அமர்ந்திருப்பது வழக்கமாம்.

மகரிஷி தேவேந்திரநாத தாகூருக்குப் பிரியமான இடம் என்பதற்காகவே கவி ரவீந்திரர் சாந்திநிகேதனம் ஸ்தாபிக்க அந்த இடத்தைப் பொறுக்கி எடுத்தார். முதன் முதலில் தாமே ஆசிரியராக ஆறு பிள்ளைகளை வைத்துக்கொண்டு அந்த வித்யா ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். ஆறு மாணவர்களில் தாகூரின் ஒரே புதல்வரான ரதீந்திரரும் ஒருவர். வரவர ஸ்தாபனம் வளர்ந்து வந்தது. அதற்கேற்ப செல்வம் பெருகி வந்தது. தாகூர் சொந்தமாகவே செல்வந்தர். தமது செல்வத்தை அங்கே

செலவழித்தார். நோபெல் பரிசாக வந்த ஒரு லட்சம் ரூபாயைக் கொடுத்தார். நோபெல் பரிசு பெற்றபிறகு தாகூரின் நூல்களுக்கு உலகமெல்லாம் பிரசித்தி ஏற்பட்டது. புத்தக விற்பனையில் பல லட்சம் ரூபாய் கிடைத்தது. அவ்வளவையும் ஸ்தாபனத்துக்கே கொடுத்தார். தாகூர் புகழ் பெற்ற பின்னர் பல தனவந்தர்கள் நன்கொடைகள் அளித்தார்கள். அப்படிக் கிடைத்த பணமும் போதவில்லை. தாகூர் உள் நாட்டிலும் அமெரிக்கா முதலிய வெளி நாடுகளிலும் சென்று சுற்றுப் பிரயாணம் செய்தார். தமது பிரசங்கங்களுக்கு டிக்கட் வைத்துப் பணம் சேர்த்தார். அந்தப் பணத்தையும் விசுவபாரதிக்கே அளித்தார். பிறகு தமது மாணவர்—மாணவிகளை அழைத்துக் கொண்டு பிரயாணம் செய்து நடனம்—நாட்டியம் முதலியவை நடத்தினர். இதன் மூலமாகவும் பணம் சேர்த்து அனுப்பினர்.

இவ்வளவும் செய்த பிறகும் சாந்தினிகேதனத்தின் செல்வ நிலைமை திருப்திகரமாக இல்லை. குருதேவருக்கு வயதாகிவிட்டது; அந்திய காலம் நெருங்கிவிட்டது. அந்தச் சமயத்தில் மகாத்மாகாந்தி சாந்தினிகேதனத்துக்கு வந்து சிலநாள் தங்கினர். குருதேவருடைய முகம் வாட்டமுற்றிருந்ததை மகாத்மா கண்டார். காரணம் கேட்டதும் குருதேவரின் கண்கள் கலங்கின. "பாபுஜி! என் வாழ்நாள் முழுவதும் இந்த ஸ்தாபனத்துக்காகப் பணம் சேர்த்தேன். அப்படியும் நெருக்கடி தீரவில்லை. எனக்கோ காலம் நெருங்குகிறது. எனக்குப் பிறகு இந்த ஸ்தாபனம் என்ன ஆகப் போகிறதோ என்று மனம் கவலைப்படுகிறது!" என்றார் குருதேவர். "வேண்டாம்;

உங்களுக்கு அந்தக்கவலை வேண்டவே வேண்டாம்! நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று மகாத்மா காந்தி உறுதி கூறியதும் குருதேவரின் முகம் பிரகாசம் அடைந்தது.

6

இப்படியாக இரண்டு மகா புருஷர்கள் பொறுப்பு எடுத்தும்காரியம் இன்னமும் திருப்திகரமானநிலைமையை அடையவில்லை. சாந்திநிகேதனத்தின் பொருளாதார நிலை இப்போதும் சுமாராய்த்தா னிருக்கிறதாம். ஆசிரியர்களுக்கெல்லாம் சாதாரணசம்பளந்தான்கொடுக்கிறார்கள். கலாபவனத்தின் தலைவரான உலகப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ நந்தலால் போஸுக்கு சம்பளம் ரூ. 200தானும்!

ராஜாஜி இரண்டு மாத காலம் இந்திய சர்க்காரின் கல்வி மந்திரியா யிருந்தபோது ஒரு நல்ல காரியம் செய்தார். தாகூரின் ஸ்தாபனத்துக்கு மூன்றரை லட்சம் ரூபாய் நன்கொடை அளித்து ஓரளவு கஷ்டத்தைத் தீர்த்தார்.

"அண்ணாமலை! நமது நாட்டில் ஒரு பொது ஸ்தாபனத்துக்குப் பொறுப்பு ஏற்று நல்ல முறையில் நடத்துவது எவ்வளவு கஷ்டமான காரியம் என்பது தெரிகிறதல்லவா?" என்று நான் கேட்டபோது, அண்ணாமலை அங்கே இல்லை. அவர் தூங்கி ஒரு ஜாமத்துக்கு மேலாயிற்று.

"ஆகையினாலேதான் உங்களைப் பொதுக்காரியம் எதிலும் தலையிட வேண்டாம் என்று சொல்கிறேன். பத்திரிகை வேலையைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கச் சொல்கிறேன்!" என்று ரஸிகமணி பதில் கூறினார்.

"எப்படிச் சும்மா இருக்கிறது? நாலு பக்கமும் கொசு வந்து தாக்கும்போது எப்படிச் சும்மாயிருக்க முடியும்?" என்று நான் கேட்டேன்.

"கொசுவலை ஒன்று எதற்காக இருக்கிறது? கொசு வலையைப் போட்டுக் கொசுவைப் பிடிப்பதுதானே? அதைத்தான் நான் செய்து கொண்டிருக்கிறேன். என்னுடைய வலைக்குள் இப்போது இரண்டாயிரம் கொசுக்கள் இருக்கின்றன. உங்களுக்கு கொஞ்சம் அனுப்பி வைக்கட்டுமா?" என்றார் ரஸிகமணி டி. கே. சி.

* * *

மறு நாள் ஆகஸ்டுமீ 8உ பொழுது விடிந்தது. மிக விசேஷமான நாள் அது. குருதேவர் ரவீந்திரரின் சிராத்த தினம். சாந்திநிகேதனத்தில் தமிழ்ப் புத்தக சாலை திகழப் போகும் தினம். உதய மாவதற்குள்ளேயே மாணவர்களும் மாணவிகளும் தாகூரின் இனிய கீதங்களைப் பாடிக்கொண்டு வலம் வந்து கொண்டிருந்தார்கள். நாங்களும் எழுந்து அன்று நடக்கப்போகும் விசேஷ வைபவங்களில் கலந்து கொள்வதற்குச் சித்தமானோம். காலை ஏழரை

மணிக்குப் பிரார்த்தனை மண்டபத்திலே எல்லாரும் வந்து கூடினார்கள். பேராசிரியர் க்ஷிதி மோகன் ஸென் நடு நாயகமாக அமர்ந்திருந்தார். இரண்டு பக்கத்திலும் பஜனைக் கோஷ்டிகள். ஒரு கோஷ்டியார் ஒரு தாகூர் கீதத்தைப் பாடுவார்கள். அதன் கருத்தை விளக்கி ஸ்ரீ க்ஷிதி மோகன் ஸென் விரிவுரை கூறுவார். இந்த க்ஷிதி மோகன்ஸென் என்பவர் ஒரு 'நடமாடும் கலைக் களஞ்சியம்' என்று தெரிந்தது. ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம், ஹிந்தி, வங்காளி ஆகிய நாலு மொழிகளிலும் அவர் கரை கண்டவராம். தாகூரின் கவிதைகளை விளக்குவதில் அவருக்கு இணை வேறு யாரும் இல்லையாம். அன்று காலை அவர் ஒரு தாகூர் கீதத்துக்கு உரை விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தபோது, மண்டபத்தின் ஒரு மூலையில் ஏதோ சிறிது 'பரபரப்பு' காணப்பட்டது. அடுத்த நிமிஷம் அது அடங்கி விட்டது. பாட்டு, பேச்சு ஒன்றும் தடைப்படவில்லை. எல்லாம் முடிந்து கூட்டம் கலைந்து கொண்டிருந்தபோது இடையில் அந்த மூலையில் ஏற்பட்ட பரபரப்புக்கு என்ன காரணம் என்று கேட்டேன். "வேறொன்றுமில்லை. ஆச்சாரிய க்ஷிதி மோகன் ஸென் பேச்சைக் கேட்டு ஒரு பெண்மணி உணர்ச்சி மிகுதியினால் மூர்ச்சையாகி விட்டார். பக்கத்திலிருந்தவர்கள் அவரை எடுத்துச் சென்று ஆசுவாசப் படுத்தி மூர்ச்சை தெளிவித்தார்கள். வேறொன்றும் பெரிய விசேஷமில்லை!" என்று சொன்னார்கள். நமக்கு வங்காளி பாஷை தெரியாதது நல்லதாய்ப் போயிற்று என்று முதலில் எண்ணிச் சந்தோஷப்பட்டு விட்டு, இம்மாதிரி மூர்ச்சையடையும் சம்பவம் நம் ஊரில் இம்மாதிரிக் கூட்டத்தில் நடந்

திருந்தால் எப்படி ஆகியிருக்கும் என்று எண்ணிப் பார்த்தேன். எப்படி ஆகியிருக்கும்? ஏகக் கூச்சலும் குழப்பமும் ஆகியிருக்கும். எல்லாரும் எழுந்து நின்று கூட்டங் கூடி நெருக்குவார்கள். "இரையாதே!" என்று நூறு பேரும், "கூட்டத்தை விலக்கு!" என்று இருநூறு பேரும், "தண்ணீர் கொண்டுவா!" என்று முந்நூறு பேரும் கத்திக்கொண்டேயிருப் பார்கள். ஒருவரும் நகரமாட்டார்கள். மூர்ச்சையாகி விழுந்த பெண்மணி தானே மனது வைத்து மூர்ச்சை தெளிந்து எழுந்தால்தான் உண்டு. பிரார்த்தனைக் கூட்டம் அத்துடன் முடிந்து போயிருக்கும்! இங்கே என்னடா என்றால், காதும் காதும் வைத்தாற்போல், ஓசைப்படாமல் ஒருவருக்கும் சொல்லாமல் மூர்ச்சை யடைந்த பெண்மணியை அப்புறப்படுத்தி விட்டார்கள். பிரார்த்தனை நடந்துகொண்டே இருந்தது.

* * *

பிரார்த்தனைக் கூட்டம் முறைப்படி நடந்ததும் ஆசிரியர்களும் மாணவர்களும் மீண்டும் கீதம் பாடிக் கொண்டு குருதேவரின் சமாதி இருக்கும் மரத்தடி வரையில் ஊர்வலமாய்ச் சென்று பிரதட்சணம் செய்து சமாதியின் மீது மலர்களைத் தூவிவிட்டுத் திரும்பி னார்கள்.

இதற்கு அடுத்த பெரிய நிகழ்ச்சி, தமிழ்ப் புத்தக சாலை விழா. சாந்தினிகேதனத்தில் நடுநாயகமான ஓர் இடத்தில் இந்த வைபவம் நடந்தது. பீடங்களின் மீது தமிழ்ப் புத்தகங்களை வரிசையாக அடுக்கி வைத்து

மலர்கள் சூட்டி அலங்கரித்து வைத்திருந்தார்கள். ஏதோ கல்யாண மண்டபத்தை ஜோடிப்பதுபோல் புத்த கங்களுக்கு எதிரில் கோலங்கள் போட்டு தீபங்கள் ஏற்றி வைத்து முக்கிய பிரமுகர்கள் உட்காருவதற்கு அழகிய இரத்தின ஜமக்காளங்களையும் விரித்திருந்தார்கள். இரத்தின ஜமக்காளத்தில் ரஸிகமணியும் ஸ்ரீ ரதீந்திர நாதரும் ஸ்ரீ க்ஷிதி மோகன் ஸென் அவர்களும் வரிசை யாக அமர்ந்தார்கள். வழக்கம் போல் மாணவிகளின் இசைப் பாடலுடன் இந்த விழாவும் தொடங்கியது. ஸ்ரீ ரதீந்திர நாதர் விருந்தினரை வரவேற்றுப் பேசினார். ராஜாஜி சில காலத்துக்கு முன்பு அங்கு விஜயம் செய் திருந்ததையும், தமிழ்ப் புத்தகங்களைப் பற்றிய பிரஸ் தாபம் ஏற்பட்டதையும், ராஜாஜியின் வேண்டு கோளின்படி ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் தமிழ்ப் புத்தக நன்கொடை யளித்ததையும் குறிப் பிட்டு நன்றி செலுத்தினார். ரஸிக மணியை அன்புடன் வரவேற்று இங்கேயே சில மாத காலம் அவர் தங்கி யிருக்கவேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார்.

ரஸிகமணி டி. கே. சி. அருமையான ஒரு பதில் பிரசங்கம் செய்தார். தமிழ் நாட்டின் மூவாயிரம் வருஷத்திய பண்பாட்டை எடுத்துக் கூறினார். டாக்டர் ரவீந்திரநாத தாகூர் தமிழ் நாட்டுக்கு வந்திருந்த போது, திருவாசகத்தின் ஆங்கில மொழிப் பெயர்ப்பைப் படித்து விட்டு, "இவ்வளவு அருமையான பொக்கிஷம் உங்கள் தமிழ் மொழியில் இருக்கிறதே? அப்படியிருந்தும் அதை ஓர் ஆங்கிலேயர் எடுத்துச் சொல்லியல்லவா நான் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது?" என்று வருத்தப்

பட்டதைக் குறிப்பிட்டார். செட்டி நாட்டு அரசர் குடும்பத்தார் கல்வி வளர்ச்சிக்காகச் செய்துவரும் பல அரும் பெரும் நன்கொடைகளைப் பற்றிச் சொன்னார். பிறகு குருதேவரிடம் தமக்குள்ள பக்தியைக் குறிப் பிட்டு, அவர் ஸ்தாபித்த இந்த அரிய ஸ்தாபனத்துக்கு வரும்படியான பாக்கியத்தைத் தமக்கு அளித்த ராஜாஜி அவர்களுக்கும் நன்றி சொல்லி முடித்தார்!

ஆசிரியர் க்ஷிதி மோகன் ஸென் பிறகு பேசினார். தமிழ் நாட்டில் தாம் பிரயாணம் செய்தபோது அந் நாட்டிலுள்ள கோயில்கள், கோபுரங்கள, சிற்பங்களில் மனதைப் பறிகொடுத்ததைப் பற்றிக் கூறினார். வங்காளத்துக்கும் மற்ற வடஇந்தியப் பிராந்தியங் களுக்கும் உள்ள உறவைக் காட்டிலும், வங்க நாட் டுக்கும் தமிழகத்துக்கும் பண்பாட்டில் நெருங்கிய தொடர்பு உண்டு என்று எடுத்துக்காட்டி முடித்தார். மங்கள கீதங்களுடன் விழா இனிது முடிந்தது.

7

நாங்கள் முக்கியமாக எந்தக் காரியத்தை முன் னிட்டு வந்தோமோ அந்தக் காரியம் சிறப்பாக முடிந்து விட்டபடியால் தலையிலிருந்து பெரிய பாரம் இறங்கப் பெற்றவர்களைப்போல் கொஞ்சம் அதிக உற்சாகத் துடனேயே அங்குமிங்கும் உலாவ ஆரம்பித்தோம். அன்று மத்தியானச் சாப்பாட்டின்போது டி. கே. சி. அவர்களின் உற்சாகம் அபரிமிதமாயிற்று. ஏதேதோ பத்துப் பதினைந்து வகைக் கறிகாய்ப் பதார்த்தங்கள்

அன்றைய தினம் எங்கள் சாப்பாட்டுக்காக வந்திருந்தன. ரஸிகமணியுடன் வந்திருந்த சங்கரன் எடுத்துப் பரிமாறினன்.

டி. கே. சி. உற்சாகமாக, "அதோ ஒரு தட்டில் ஏதோ இருக்கிறதே, அதை எடுத்துப் படை! இங்கே என்னமோ இருக்கிறதே, இதைப் படையேன்! ஏன் சும்மா நிற்கிறாய்? அங்கே அந்தப் பெரிய தட்டில் ஏதோ உருண்டையா யிருக்கிறதே! உன் கண்ணில் படவில்லையா?" என்றெல்லாம் அதட்டி உருட்டிப் படைக்கச் செய்தார். ஆனால், தட்டையா யிருப்பதைப் படைத்தாலும், உருண்டையா யிருப்பதைப் படைத்தாலும், மெலிந்திருப்பதைப் படைத்தாலும், பருமனா யிருப்பதைப் படைத்தாலும், எல்லாம் நாவுக்கு ஒரே ருசியாக இருந்தது! எடுத்துப் படைத்த சங்கரனுடைய கைக் கோளாறுதான் காரணம் என்று எண்ணி, அவனுடைய கையை நன்றாய்க் கழுவிக்கொண்டு வந்து படைக்கச் சொன்னோம். நாங்களே படைத்துக்கொண்டு பார்த்தோம். அப்படியும் எதை நாவில் போட்டாலும் ஒரே ருசியாகத்தான் இருந்தது!

வங்காளிகளின் சங்கீதம் இருக்கிறதே! அதுவும் இப்படித்தான். எந்தப் பாட்டைக் கேட்டாலும் ஒரே ராகம், ஒரே தாளம், ஒரே நடை, ஒரே ரஸம்! அந்த ஒரு ரஸமும் சோக ரஸந்தான்! சாந்திநிகேதனத்தில் மூன்று தினங்கள் இருந்தோம். முந்நூறு கீதங்கள் கேட்டிருப்போம். அவ்வளவும் ஒரு பாட்டு மாதிரியே இருந்தது.

அன்று மாலை ஸ்ரீ ரதீந்திர தாகூரின் காரிய தரிசியான ஸ்ரீ க்ஷிதீஸ் ராய் அவர்களைச் சந்தித்தபோது வங்காளி சங்கீதத்தின் மேற்படி இயல்பைக் குறித்துக் கேட்கலாம் என்று எண்ணி, சங்கீதத்தைப் பற்றிப் பேச்சு எடுத்தேன். ஸ்ரீ க்ஷிதீஸ் ராய் உடனே என்னைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்:— "ஏன் ஸார்! உங்களிடம் ஒன்று கேட்கலாமென்று எண்ணியிருக்கிறேன். கர்நாடக சங்கீதத்தில் எத்தனை பாட்டுக் கேட்டாலும் எல்லாம் ஒரு பாட்டு மாதிரியே இருக்கிறதே, அது ஏன்?"

எனக்கு மூச்சு நின்றுபோய்விட்டது. நான் அவரிடம் கேட்க எண்ணியிருந்த கேள்வியைக் கேட்கவில்லை.

* * *

தாகூரின் சிராத்த தினத்தன்று மாலை ஒவ்வொரு வருஷமும் மரம் நாட்டுவிழா நடைபெறுவது வழக்கமாம். அன்று மாலை மழை பிடித்துக்கொண்டு ஒரே கொட்டாய்க் கொட்டியது. பாருங்கள்! இந்த மழையைப் போல் ரொம்ப பொல்லாதது வேறு எதுவும் கிடையாது. இங்கே நாம் உணவு இன்றித் தவிக்கிற சமயம், இந்த வருஷம் ஐப்பசி—கார்த்திகையில் மழை பெய்யாமலே டிமிக்கி கொடுத்துவிட்டது! ஆஸ்திரேலியாவுக்கு நம் ஊரிலிருந்து கிரிக்கெட் கோஷ்டி அனுப்பியிருக்கிறோமே, அவர்களின் கிரிக்கெட் ஆட்டத்தைப் பாழ் பண்ணுவதற்கென்று அங்கே போய் மழை ஊற்றுகிறது! இந்த மாதிரி வேண்டாத இடத்தில் வேண்டாத சமயத்தில் பெய்வதே இந்த மழைக்கு வரவர வழக்கமாகிக்

கொண்டே வருகிறது. அந்த வழக்கப்படியே சாந்திநி கேதனத்தில் எப்படியோ தமிழ்ப் புத்தக விழா நடத்த இடங்கொடுத்த மழை, மாலையில் மரம்நாட்டுவிழா நடத்த முடியாமல் தடுத்துவிட்டது.

எனவே மறுநாள் 9உ காலையில் அந்த விழா நடந்தது. அடடா! அந்த விழாவின் அழகை என்னால் வர்ணிக்க முடியாது. ஒரு காளிதாஸனோ, ஒரு கம்பனோ, ஒரு தாகூரோ, ஒரு பாரதியோ அதற்கு வேண்டும்.

ஒரு சின்னஞ் சிறு செடிக்குப் பூமாலை சூட்டி அலங்கரித்தார்கள். அதை விமானத்தில் ஏற்றி வைத்து மேலே பூச்சக்கரக் குடை பிடித்தார்கள். நாலுபேர் விமானத்தைத் தூக்கிக் கொண்டார்கள். எதிரே சுமார் நூறு பெண்கள் இருவரிசையாக நின்று ஆடலும் பாடலுமாக நடந்து சென்றார்கள். அந்தப் பெண்களுக்கு முன்னால் சிலர் மத்தளம் கொட்டினார்கள். சிலர் சங்கம் ஊதினார்கள். சிலர் வெண்சாமரம் வீசினார்கள். சிலர் மலர்களைத் தூவினார்கள். இம் மாதிரி அழகிய ஊர்வலம் அரை மைல் தூரம் சென்ற பிறகு செடியை நடுவதற் காகத் தேர்ந்தெடுத்த இடம் வந்தது. அங்கே செடியை நடுவதற்காகக் குழி வெட்டி, குழியைச் சுற்றி வித விதமான வர்ணக்கோலங்கள் போட்டிருந்தார்கள். குழிக்கு எதிரே உயரமான மேடைமீது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆகிய பஞ்ச தேவர்களும் வீற்றிருந்தார்கள். அதாவது ஐந்து குழந்தைகளுக்கு அவ்வாறு வேஷந்தரித்து உட்கார்த்தி வைத்திருந்தது. அக்கினிக்குச் சிவப்பு உடை, நீருக்கு நீல உடை

இப்படியாக வேஷங்கள். ஆச்சாரிய க்ஷிதி மோகன் ஸென் புரோகிதம் செய்ய ஸ்ரீ ரதீந்திரரின் மனைவியார் (அதாவது டாக்டர் தாகூரின் நாட்டுப் பெண்) செடியை நீரால் அபிஷேகம் செய்து பூமியிலே நாட்டினார். சங்கங்கள், குழல்கள், மத்தளங்களோடு மாணவர்களும் மாணவிகளும் நாத கீதங்களை ஒருமிக்க எழுப்பினார்கள். இத்துடன் இந்த விழாவும் இனிது நிறைவேறியது.

மொத்தத்தில் விசுவ பாரதியும் சாந்திநிகேதனமும் ஏதோ பள்ளிக்கூடம் அல்லது கலாசாலையாகவே எச்சமயமும் தோன்றுவதில்லையாம். வருஷ ஆரம்ப முதல் வருஷ முடிவு வரையில் ஒரே திருவிழா மய மாகவே இருக்குமாம். கல்வியை ஓர் இடைவிடா உற்சவமாகச் செய்திருக்கிறார் குருதேவர் தாகூர். ஆஹா! அங்கே படிக்கும் மாணவர் மாணவிகளின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!

*   *   *

அன்றைக்கும் மறுநாளும் சாந்திநிகேதனத்தில் பார்க்கவேண்டிய காட்சிகளை யெல்லாம் பார்த்தோம். கலைபவனத்தில் ஸ்ரீ நந்தலால் போஸ் அவர்களின் மாணவர்களும் மாணவிகளும் செய்யும் சித்திர சிற்ப வேலைகளைப் பார்த்தோம். 'சீன பவன்'த்தில் வரிசை வரிசையாக அடுக்கி வைத்திருக்கும் பழைய சீன நூல் களைப் பார்த்தோம். சீனத்திலிருந்து இரண்டு இளம் ஆசிரியர்கள் வந்து இங்கேயே தங்கி ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கும் அதிசயத்தையும் பார்த்தோம். மறுநாள் சாந்திநிகேதனத்துக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள

ஸ்ரீ நிகேதனத்துக்குச் சென்றோம். டாக்டர் தாகூர் பாரதநாட்டின் நிலைமையை உணர்ந்து இலக்கியமும் கலையும் மட்டும் வளர்ந்தால் போதாது என்றும், நாட்டில் விவசாயம், கைத்தொழில் ஆகியவை வளர வேண்டும் என்றும் தீர்மானித்து இந்த ஸ்ரீ நிகேதனத்தை ஏற்படுத்தினார். இங்கே நடக்கும் பல கைத் தொழில்கள், மாட்டுப் பண்ணை, விவசாயப் பண்ணை ஆகியவற்றையும் பார்த்தோம். விவசாயப் பண்ணையில் நாங்கள் பார்த்த பெரிய அதிசயம் அங்கே ஆராய்ச்சி வேலை நடத்திக்கொண்டிருக்கும் ஓர் அமெரிக்க இளைஞர். அடே அப்பா! இந்த அமெரிக்கர்கள் எவ்வளவு பொல்லாத மனிதர்களாயிருக்கிறார்கள்! எங்கெங்கே போய் என்னென்ன வேலையெல்லாம் செய்கிறார்கள்? உலகத்தின் ஆதிபத்தியம் அமெரிக்கர் கைக்குப் போய்க் கொண்டிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை!

8

இருபது வருஷத்துக்கு முன்னால் சாந்தினிகேதனம் சென்றிருந்தபோது, பிரார்த்தனைக் கூடத்தில் தாகூரைப் பார்த்தேன் என்று சொன்னேனல்லவா? இந்த முறை டாக்டர் தாகூரை பிரார்த்தனை மண்டபத்திலே மட்டும் நான் பார்க்கவில்லை. சாந்தினிகேதனத்திலுள்ள ஒவ்வொரு கட்டிடத்திலும் குடிசையிலும் அவரைப் பார்த்தேன். ஒவ்வொரு செடியிலும் கொடியிலும் ஒவ்வொரு மரத்திலும் மலரிலும் அவரைப் பார்த்தேன். ஒவ்வொரு ஆசிரியரிடத்தும் ஒவ்வொரு மாணவ

ரிடத்தும் அவரைப் பார்த்தேன். ஒவ்வொரு சிற்பத்திலும் சித்திரத்திலும் பார்த்தேன். ஒவ்வொரு விழாவிலும் வைபவத்திலும் பார்த்தேன்.

எங்கே திரும்பினாலும் மகா கவி தாகூரின் சாந்தம் குடிகொண்ட திருமுகம் தோன்றிக் கொண்டிருந்தது. அவருடைய அமுதக் கவிதைகள் அங்குள்ள மாஞ் செடிகளின் மாமர சப்தத்தில் ஒலித்துக் கொண்டிருந்தன. அவருடைய ஆத்மாவின் தபோசக்தி காற்று வெளியெல்லாம் பரவிச் சூழ்ந்து அந்தப் பிரதேசத்துக்கே தூய்மை அளித்துக் கொண்டிருந்தது.

டாக்டர் தாகூர் ஒரு மகா கவி மட்டுமல்ல ; மகா ஞானி ; மகா தேசபக்தர் ; மகா தியாகி ; மகா தபஸ்வி. காந்தி மகாத்மாவினால் ‘ குருதேவர் ’ என்று போற்றப் பட்ட ஆத்மசக்தி வாய்ந்த பெரியார். அவரால் ஸ்தாபிக்கப்பட்ட இந்தக் குருகுலம் பண்டைக் காலத்து நாலந்தாவையும் தட்சசீலத்தையும் போல ஆயிரம் ஆண்டுகள் நிலைபெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. அதனுடைய புகழ் உலகமெங்கும் பரவி விளங்கும் என்றும் நிச்சயமாய்ச் சொல்லாம்.

அத்தகைய சர்வதேச ஸ்தாபனத்தில் தெய்வத் தமிழ் மொழிக்கு ஓர் இடம் இருப்பது மிக அவசியம். சீனபவனத்தைப்போல் ‘ தமிழ் பவனம் ’ அல்லது ‘ தக்ஷிண பவனம் ’ அங்கு ஏற்பட்டால் மிகவும் மேன்மையாயிருக்கும்.

செட்டிநாட்டு அரசர் தொட்டதெல்லாம் துலங்கச் செய்யும் அதிர்ஷ்டக் கை உடையவர் என்று சொல்லக்

கேட்டிருக்கிறோம். அவர் தமிழ் பவனத்துக்கு அஸ்தி வாரம் அமைத்திருக்கிறார். அதாவது தமிழ்ப் புத்தக நன்கொடை அளித்திருக்கிறார். அந்தப் புத்தகங்களை வைக்க ஒரு தனிக் கட்டிடமும், அந்தக் கட்டிடத்திலே ஒரு தமிழ் ஆசிரியரும் அடுத்தபடியாக வேண்டும். தமிழ் ஆசிரியருக்கு உதவியாக இன்னொரு ஆசிரியரும் அவர் களுடைய உதவி கொண்டு ஆராய்ச்சி நடத்தும் மாணவர் களும் பின்னால் சேர்வார்கள். இப்படியாக, செட்டி நாட்டு அரசரின் புத்தக நன்கொடை ஒரு தமிழ் பவன மாக வளர்ந்து விடவேண்டும் என்பது பலருடைய மனோரதம்.

தெய்வத் தமிழின் சிறப்பை உலகம் அறியச்செய்ய வேண்டுமென்றால், மகாபுருஷர் தாகூர் அமைத்த சாந்தினி கேதனத்தில் ‘ தமிழ் பவனம் ’ ஏற்படவேண்டும்.

சுதந்திரத் தலைநகரம்

பஞ்சபாண்டவர்கள் என்றால் நேயர்களுக்குத் தெரியாதா, என்ன ? அவர்கள்தான் ! 'கட்டில் காலைப்போல் மூன்றுபேர்' என்று சொல்லி இரண்டு விரலைக் காட்டி... போதும் ! நிறுத்துங்கள் ! அந்த இரண்டு பேராவது பாக்கியிருக்கட்டும் ! மேற்படி பஞ்ச பாண்டவர்கள் ஒரு சமயம் துரியோதன மகாராஜனிடம் சென்று "எங்களுக்கு ஐந்து ராஜ்யம் வேண்டும் ; இல்லாவிடில் ஐந்து ஊர் வேண்டும் ; அதுவும் இல்லாவிடில் ஐந்து வீடு வேண்டும் !" என்று கேட்டார்கள். "ஐந்து ராஜ்யம் கிடையாது ; ஐந்து ஊர் கொடுக்க முடியாது ; ஐந்து வீடு வேண்டுமானால் வீட்டு வாடகைக் கண்ட்ரோலரிடம் விண்ணப்பம் போடுங்கள் !" என்றான் துரியோதனன். "வீட்டுக் கண்ட்ரோலரிடம் போவதை விடக் காட்டுக்குப் போய்த் தொலைகிறோம் !" என்று பஞ்ச பாண்டவர்கள் போனார்கள். போன இடத்தில் காண்டவவனத்தைத் தகனம் செய்து இந்திரப் பிரஸ்தம் என்னும் புது நகரை நிர்மாணித்தார்கள்.

தில்லியில் பஞ்சபாண்டவர்களின் இந்திரப் பிரஸ்தம் இருந்த இடத்திலேதான் இப்போது 'புரானா கிலா'

என்னும் புராதன இடிந்த கோட்டை இருப்பதாகச் சொல்கிறார்கள்.

தில்லிக்குப் போயிருந்தபோது 'புராணகிலா' வைப் பார்க்கப் போயிருந்தேன். இந்திரப் பிரஸ்தத்தை எண்ணிக் கொண்டுபோன என்னை அங்கே தோன்றிய காட்சிகள் திகைப்படையச் செய்தன.

நூற்றுக்கணக்கான பஞ்சாப் அகதிகளின் கூடாரங்களை அங்கே கண்டேன். நாடு நகரங்களையும் வீடு வாசல்களையும் ஒரே நாளில் இழந்து உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடிவந்தவர்களைக் கண்டேன். சொல்ல முடியாத பயங்கர கோர நிகழ்ச்சிகளை யெல்லாம் கண்ணால் பார்த்து விட்டுச் சித்த பிரமை கொண்டவர்களைப்போலிருந்த ஸ்திரீ புருஷர்களைக் கண்டேன். முதல் நாள் லட்சாதிபதிகளா யிருந்துவிட்டு மறுநாள் பிட்சாதிபதிகளானவர்களை அங்கே கண்டேன். தாயற்றவர்களும் தந்தையற்றவர்களும் அண்ணன் தம்பிகளையும் அக்கா தங்கைகளையும் இழந்தவர்களுமான சின்னஞ் சிறு குழந்தைகள் குதூகலமாய் ஓடி ஆடுவதைக் கண்டேன். ஒரு விதத்தில் அந்தக் குழந்தைகள் பாக்கியசாலிகள்! பத்து மாதத்துக்கு முன்பு நடந்ததை யெல்லாம் மறந்துவிட்டார்கள்! இடுப்பிலே துணி இல்லாவிட்டாலும் உண்ண உணவு இல்லாவிட்டாலும் குஷியாக அங்கு மிங்கும் ஓடி விளையாடுகிறார்கள். குழந்தைகள் குளிப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கும் நீளமான தண்ணீர்த் தொட்டிகளில் இறங்கிக் குதூகலமாகக் குளிக்கிறார்கள். தண்ணீரை வாரி இறைத்து விளையாடுகிறார்கள்.

கொஞ்சம் வயதான குழந்தைகளுக்கெல்லாம் கூடாரங்களுக்குக் கீழே பள்ளிக்கூடங்களும் நடைபெறுகின்றன. பாவம்! அந்தக் குழந்தைகள் ஊரை விட்டு வீட்டை விட்டுப் பலநூறு மைல் ஓடி வந்திருந்தும் உபாத்தியாயர்களும் அவர்களுடைய கைப் பிரம்புகளும் மட்டும் அக்குழந்தைகளை விட்டபாடில்லை.

பஞ்ச பாண்டவர்களுடைய இந்திரப் பிரஸ்த நகரம் இருந்த இடத்தில் இன்று இந்த அகதிகள் இருப்பது ஒரு வகையில் பொருத்தமானதுதான். துரியோதன மகாராஜனால் துரத்தப்பட்டு முதன் முதலில் தில்லிக்கு வந்து சேர்ந்த அகதிகள் பஞ்ச பாண்டவர்கள் அல்லவா?

* * *

பஞ்ச பாண்டவர்கள் காட்டிய வழியைச் சரித்திர காலத்தில் அநேகர் பின்பற்றினார்கள். இந்தியாவின் பெரும் பகுதியையோ சிறுபகுதியையோ ஆண்ட மன்னர்கள் பலர், இந்திரப் பிரஸ்தத்துக்குச் சுற்றுப்புற பிரதேசத்தில் புதிய புதிய தலைநகரங்களைக் கட்டினார்கள். இம்மாதிரி பழைய காலத்து மன்னர்கள் கட்டிய ஏழு தலைநகரங்களின் சின்னங்கள் தில்லி என்று பொதுப்படையான பெயருள்ள விஸ்தாரமான பிரதேசத்தில் இருக்கின்றன. எட்டாவது நகரந்தான் பிரிட்டிஷார் நிர்மாணித்த புது தில்லி.

மேற்கூறிய பழைய தலைநகரங்களில் மிகப் பழமையானது பிரிதிவிராஜனுடைய தலைநகரம். உலகத்து

மகா காதலர்களின் வரிசையில் முதன்மை ஸ்தானம் பெற்ற பிரிதிவிராஜனைத்தான் சொல்கின்றேன்.

தில்லி சுதந்திர இந்தியாவின் தலைநகரமாகியிருக்கும் இந்த வருஷத்தில் பழைய பிரிதிவிராஜனுடைய தலைநகரத்தைப் பார்க்க வேண்டுமென்று விரும்பி அங்கே போயிருந்தேன்.

'குதுப்-மினர்' என்னும், இந்தியாவிலேயே மிகவும் உயரமான கோபுரம், பிரிதிவிராஜனுடைய நகரம் இருந்த இடம் இதுதான் என்பதை எடுத்துக் காட்டிக் கொண்டு நிற்கிறது.

பிரிதிவிராஜன் தன்னுடைய தலைநகரில் இருபத்து நாலு தேவாலயங்கள் கட்டினன் என்று சரித்திரம் தெரிவிக்கிறது. பிரிதிவிராஜன் போர்க்களத்தில் இறந்து பட்டு வீர சொர்க்கம் அடைந்த பிறகு, கோரி முகம்மதுவும் அவனுக்குப் பின்னல் வந்த பட்டாணி அரசர்களும், உடைத்தல்—நொறுக்கல்—திருப்பணிகளை எவ்வளவோ செய்தார்கள். ஆனலும் பிரிதிவிராஜனுடைய ஆலயச் சின்னங்களை அவர்களால் அடியோடு அழிக்க முடியவில்லை. ஏறக்குறைய நம் தமிழ்நாட்டு ஆலயங்களைப் போலவே பிரிதிவிராஜனுடைய ஆலயங்கள் அமைந்திருக்க வேண்டும். சிற்ப வேலைப்பாடு பொருந்திய நூற்றுக்கணக்கான ஆலயத் தூண்கள் 'குதுப்-மினர்' கோபுரத்தைச் சுற்றி இன்றைக்கும் காணப்படுகின்றன.

ஆலயங்களை இடித்து எடுத்த கற்களை வைத்துக் கொண்டு மசூதிகளும் சமாதிகளும் மினர்களும் கட்டி

யிருக்கிறார்கள். சில இடங்களில் ஆலயத் தூண்களை உட்புறத்தில் ஆதாரமாக வைத்துக்கொண்டு மசூதிகளின் சுவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அந்தச் சுவர்கள் இடிந்து விழுந்ததும் ஆலயத் தூண்கள் வெளிப்பட்டுத் தோன்றுகின்றன.

கோரி முகம்மது இயன்ற வரையில் அடித்தல்-உடைத்தல் தொண்டு நடத்தியபிறகு, தில்லியில் தளபதி குத்புதீன் என்பவனைத் தன்னுடைய பிரதிநிதியாக விட்டுச் சென்றான். கோரி முகம்மது அப்பால் போனவுடனே குத்புதீன் தானே தில்லி சக்கரவர்த்தி என்று பறை சாற்றி விட்டுச் சிம்மாசனம் ஏறினான். தன்னுடைய வெற்றிக்கு அறிகுறியாக, பிரிதிவிராஜனுடைய அரண்மனையும் ஆலயமும் இருந்த இடத்தில் குதுப்-மினார் என்னும் கோபுரத்தைக் கட்டத் தொடங்கினான். குத்புதீன் ஆரம்பித்த கோபுரத்தை அவனுடைய வம்சத்தைச் சேர்ந்த அல்டமிஷ் என்பவன் பூர்த்தி செய்தான்.

குதுப்மினார் கோபுரத்தைக் குத்புதீன் கட்டியதாகச் சில சரித்திரக்காரர்களும் அல்டமிஷ் கட்டியதாக வேறு சிலரும் சொல்கிறார்கள். இரண்டு பேருக்கும் பொதுவாக அவன் பாதி இவன் பாதி கட்டியதாகச் சில சமரச சரித்திராசிரியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்தச் சரித்திர அபிப்ராயங்களைத் தவிர இன்னொரு வகை அபிப்பிராயமும் உண்டு என்று இந்தத் தடவை 'குதுப்-மினார்' போயிருந்தபோது தெரியவந்தது.

* * *

குதுப்-மினாரையும் அதைச் சுற்றியுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற இடிந்த கட்டிடங்களையும் பார்த்துக் கொள்ள அங்கே ஒரு காவலாளி இருக்கிறான். அவன் அதி தீவிர ஹிந்து. அங்கே வருகிறவர்களுக் கெல்லாம் மேற்படி கட்டிடங்களைப் பற்றிய உண்மையான விவரங்களை அவன் எடுத்துச் சொல்லி வருகிறான். பிரிதிவிராஜனுடைய அரண்மனை இது, ஆஸ்தான மண்டபம் இது, அந்தப்புரம் இது என்றெல்லாம் எங்களுக்கு அவன் உணர்ச்சியோடு உருக்கமாகச் சொன்னான். பிறகு பிரிதிவிராஜன் கட்டிய கோயில்கள் இருந்த இடங்களை அவன் காட்டினான். கோயில் தூண்களையும், தூண்களில் பிரதிமைகள் இருந்த இடங்கள் மட்டும் காலியாக இருப்பதையும் காட்டினான். சந்திரகுப்த விக்ரமாதித்யனுடைய பிரசித்தி பெற்ற இரும்பு ஸ்தம்பத்தை வெகு பெருமையுடன் சுட்டிக் காட்டினான். கடைசியாக எங்கே குதுப்–மினாரை நாங்கள் பார்க்காமல் விட்டுவிடப் போகிறோமோ என்று அதையும் சுட்டிக் காட்டி "தேக்கா?" என்றான்.

"கூப் தேக்கா!" என்றேன் நான். பிறகு "இந்தக் குதுப்-மினாரை யார் கட்டியது? குத்புதீனா? அல்டமிஷா?" என்று கேட்டேன்.

உடனே அவனுக்குப் பிரமாத கோபம் வந்து விட்டது. "ஜூட் பாத் ஹை!" என்று ஒரு போடு போட்டான்.

"ஜூட் பாத் ஹை?" என்று நானும் திருப்பிப் போட்டேன்.

" ஜரூர், ஜூட் பாத் ஹை !"

" ஜரூர், ஜூட் பாத் ஹை ?"

ஹிந்தி பாஷையில் ஒரு சௌகரியம் உண்டு. வாக்கியத்தின் கடைசி வார்த்தையைக் கொஞ்சம் தூக்கிப் பிடித்து நிறுத்திஞல் அது கேள்வியாகி விடும். ஆகையால் ஒருவன் சொல்வதை நாம் திருப்பிச் சொல்லிக் கொண்டே சம்பாஷணையை நடத்திவிடலாம்.

பிறகு அந்தக் காவலன் ஹிந்தியில் கூறியதற்கு உண்மையான மொழிபெயர்ப்பைக் கேளுங்கள் :— குதுப்மிஞர் குத்புதீஞல் கட்டப்பட்டாள் என்பது பொய் வார்த்தையா யிருக்கிருள். அல்டமிஷிஞல் கட்டப்பட்டாள் என்பதும் பொய் வார்த்தையா யிருக்கிறவளே தான். குதுப் கோபுரம் உண்மையில் பிரிதிவிராஜஞல் கட்டப்பட்டார்கள். பிரிதிவிராஜ னுடைய குமாரியிஞல் இந்தக் கோபுரம் தினந்தினம் ஏறப்பட்டார்கள். கோபுரத்தின் உச்சியிலிருந்து பிரிதிவி ராஜனுடைய மகள் யமுஞ நதியைத் தரிசனத்துக்கு உள்ளாக்கிய பிறகு அவளால் மத்தியான போஜனம் சாப்பாட்டுக்கு உட்பட்டனள் !"

" பிரிதிவிராஜனுடைய குமாரி யமுனையைத் தரிசிப்பதோடு திருப்திக்கு உள்ளாஞளா ? அல்லது எப்போதாவது யமுனைநதி அவளால் குளிக்கப்படுவதும் உண்டா ?" என்று நான் கேட்டேன்.

" சில சமயம் யமுனை குளிக்கப்படுவதும் உண்டு ; வருஷத்துக்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவை யமுனை ராஜகுமாரியிஞல் குளித்தல் செய்யப்பட்டாள் !"

" யமுனைக்கு இங்கிருந்து ராஜகுமாரி எப்படிப் போவாள் ?" என்று கேட்டேன்.

" இல்லை ; இல்லை ; இராஜகுமாரி போகமாட்டாள். யமுனைதான் இங்கே வருவாள் !" என்றான்.

" எப்படி வருவாள் ?"

" சில சமயம் நடந்து வருவாள் ; சில சமயம் குதிரைமேல் வருவாள்."

" அப்புறம் ? "

" ராஜகுமாரி குளிப்பதற்கு உள்ளானதும் திரும்பிப் போய்விடுவாள் !"

" யார் ?"

" யமுனை !"

" பிரிதிவிராஜனுடைய குமாரி குளிப்பதற்கு எந்த சோப்பை உபயோகித்தாள் என்று நீ அறிந்திருப்பதுண்டா ? ' லக்ஸ் ' டாய்லட் சோப்பையா ? பிரசித்தி பெற்ற சினிமா நட்சத்திரம் ஸ்ரீமதி கனகமணிதேவி உபயோகிக்கும் ' ஹமாம் ' சோப்பையா ?"

" பிரிதிவிராஜனுடைய குமாரி குளிப்பதற்குச் சோப்பு உபயோகிப்பதில்லை. அவள் இமயமலையின் உறைந்த பனிக் கட்டியை உபயோகிப்பாள்."

" பனிக்கட்டி இங்கே எப்படி வரும் ?"

" சில சமயம் ஒட்டகையின் மேல் வரப்படுவான் ; சில சமயம் டோங்கா வண்டியிலும் வருதலைச் செய்வான் !"

“ வழியிலே பனிக்கட்டி கரைந்து போகாம லிருக்குமா ?''

“ அதெல்லாம் கரையமாட்டான் ; இப்போது மெஷின்களினுல் செய்யப்படும் உபயோகமற்ற ஐஸ் கட்டி என்று எண்ணினீரோ ! இமய மலையில் உச்சிச் சிகரத்திலிருந்து வரும் குளிர்ந்த பனிக்கட்டி கரையவே கரையமாட்டான் !”

“ அதெல்லாம் இருக்கட்டும் ; இந்தக் கோபுரத்தின் மேல் அரபு எழுத்து மாதிரி எழுதியிருக்கிறதே ! பிரிதிவிராஜன் கட்டியவளான கோபுரமா யிருந்தால்...?”

“ ஜுட் பாத் ஹை ! சப் ஜுட் பாத் ஹை ! பிரிதிவி ராஜன் கட்டிய கோபுரத்தின் மேற்பக்கத்தைச் சுரண்டி விட்டுக் குத்புதீன் அரபு எழுத்துக்களை எழுதச் செய்து விடப்பட்டவனுயினுள் !” என்றுன் அந்தக் காவலன்.

இத்துடன் குதுப்—மினர் கதையை நிறுத்திக் கொண்டு மேலே செல்கிறேன்.

* * *

குத்புதீன் தன்னுடைய அரசியல் வாழ்க்கையை, கோரி முகம்மதுவின் அடிமையாக ஆரம்பித்தான். அதனுல் குத்புதீன் வம்சத்துக்குச் சரித்திரத்தில் அடிமை வம்சம் என்று பெயர் வழங்குகிறது. குத்புதீன் வம்சத்துக்குப் பிறகு தில்லியில் கில்ஜி

வம்சமும், லோடி வம்சமும் தொடர்ந்தன. இப்ராஹிம் லோடியைப் பானிப்பட்டு யுத்தத்தில் தோற்கடித்துப் பாபர் மொகலாய வம்சத்தை ஸ்தாபித்தான். மொகலாய வம்சத்தார் 1857-ல் நடந்த புரட்சிப் போர் வரையில் தில்லியில் நிலைபெற்றிருந்தார்கள்.

ஒவ்வொரு பட்டாணிய வம்சத்தாரும், மொகலாய வம்சத்தாரும் பழைய தலைநகரங்கள் பிடிக்காமல் தில்லிப் பிரதேசத்தில் புதிய புதிய நகரங்களைக் கட்டினார்கள். அரண்மனைகளையும், மசூதிகளையும் கட்டினார்கள். நகரங்களைச் சுற்றிக் கோட்டைகளும் கட்டினார்கள். அதோடு ஒவ்வொரு சுல்தானுக்கும், பாதுஷாவுக்கும், சேனாதிபதிக்கும் 'கபர்ஸ்தான்' என்று சொல்லப்படும் சமாதிக் கட்டிடங்களையும் கட்டினார்கள். செத்துப் போனவர்களுக்காக கட்டிய கட்டிடங்கள் உயிரோடிருப்பவர்களுக்குக் குடியிருக்க இடமில்லாமல் செய்தன! ஆகவே, நகரம் நாலாபுறமும் விஸ்தரித்துக் கொண்டே சென்றது. பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னால் தில்லியில் கட்டப்பட்ட தலைநகரங்களில் இன்றுவரை இடிந்து பாழாகாமல் ஏறக்குறையப் புத்தப் புதியதாகத் தோன்றுவது ஷாஜஹான் கட்டிய நகரமாகும். இதற்கு ஷாஜஹானாபாத் என்று பெயர். சமீப காலத்தில் ஐ. என். ஏ. விசாரணையினால் பிரபலமடைந்த செங்கோட்டை மேற்படி ஷாஜஹானாபாத்தில் தான் இருக்கிறது. அதே கோட்டையில்தான் இப்போது காந்தி மகான் கொலை வழக்கும் நடந்து வருகிறது.

* * *

மொகலாய வம்சம் 1857-ல் அடியோடு 'கபர்ஸ் தான்' அடைந்த பிறகு, சில காலத்துக்குத் தில்லியின் புகழ் மங்கிக் கிடந்தது. பிறகு யாரோ ஒரு ஆங்கிலேய தீர்க்கதரிசியின் உள்ளத்தில் தில்லியை மறுபடியும் இந்தியாவின் தலைநகரமாக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அந்தத் தீர்க்கதரிசி இந்திய சரித்திரத்தில் தில்லி எதனாலே அவ்வளவு முக்கியத்துவம் அடைந்திருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்த்தார். இமய மலைக்கும், விந்திய மலைக்கும் மத்தியில் உள்ள ஆரியா வர்த்தம் அல்லது ஹிந்துஸ்தானுக்குத் தில்லி அமைந்திருக்கும் இடந்தான் கேந்திரஸ்தானம் என்பதை அவர் தெரிந்துகொண்டார். யமுனைக் கரையில் மேட்டுப் பாங்கான விஸ்தாரமான பிரதேசத்திலே தில்லி அமைந்திருப்பதனால் ஒரு பெரிய நகர நிர்மாணத்துக்கு வேண்டிய பல வசதிகள் அங்கே இருக்கின்றன. ஜீவ நதியாகிய யமுனைநதி எப்போதும் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்கிறது. மேட்டுப் பாங்கான நிலப் பிரதேசமாகையால் தண்ணீர் தங்குவதில்லை ; ஆகையால் சுகாதாரத்துக்கு மிகவும் உகந்தது.

தில்லியில் இருந்தபடி வடமேற்கே பஞ்சாப்பையும், தென் கிழக்கே பீஹார்—வங்காளத்தையும், தெற்கே ராஜபுதனம், மாளவம் முதலிய பிரதேசங்களையும் நன்கு கண்காணித்துக் கொள்ளலாம். அலாவுதீன் கில்ஜி முதல் அவுரங்கஜீப் வரையில் தில்லியிலிருந்து நாலா புறமும் படையெடுத்துச் சென்று தங்களுடைய சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்கவும் நிர்வாகிக்கவும் சாத்தியமா யிருந்தது.

இதையெல்லாம் அறிந்துதான் அந்த ஆங்கிலேய தீர்க்கதரிசி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் தலை நகரைக் கல்கத்தாவிலிருந்து தில்லிக்கு மாற்ற வேண்டும் என்றார். 1912-ம் வருஷத்தில் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது. அதிலிருந்து தில்லி நகரம் மறுபடியும் தலை தூக்கிற்று. ஜனத் தொகை பெருகிற்று. 1921-ம் ஆண்டில் தில்லியின் ஜனத்தொகை ஒரு லட்சமாக இருந்தது. இப்போது தில்லியின் ஜனத்தொகை பத்து லட்சத்துக்கு மேல் போய்விட்டது.

பத்து லட்சம் என்பது பழைய தில்லி நகரிலே மட்டுந்தான். புதிய தில்லி நகரில் சுமார் இரண்டு லட்சம் ஜனங்கள் இப்போது வசிக்கிறார்கள்.

தில்லி நகரில் அரசாண்ட ஒவ்வொரு வம்சத்தாரும் ஒரு புதுநகரைக் கட்டினார்கள் அல்லவா? அது போலவே பிரிட்டிஷாரும் புது தில்லி நகரத்தை நிர்மாணம் செய்தார்கள்.

* * *

புது தில்லி நகரின் அமைப்பு வெகு நேர்த்தியானது. நேர் நேரான சாலைகள்; சாலைகளுக்கு இருபுறமும் வரிசை வரிசையான மரங்கள், ஒரே அளவாய், ஒரே உயரமாய்ச் சாலைகளின் இருபுறத்திலும் குடை பிடித்ததுபோல் தோன்றும் அரசமர வரிசைகளின் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

ஆங்காங்கு ஐந்தாறு சாலைகள் வந்து ஓரிடத்தில் கூடுகின்றன. இந்தமாதிரிச் சாலைச் சந்திப்புகளில் வட்ட

வடிவமான புல்தரைகள் இருக்கின்றன. புது தில்லியில் புதிதாகப் போகிறவர்களுக்கு மேற்படி வட்டப் புல் தரைகளுள் ஒன்றுக்கொன்று வித்தியாசம் தெரியாது.

விஸ்தாரமான ஒரு கற்பாறை மேட்டில் முக்கிய மான சர்க்கார் கட்டிடங்கள் அமைந்திருக்கின்றன. இருபுறமும் செக்ரடேரியட் கட்டிடங்கள். நடு மத்தியில் கவர்னர் ஜெனரல் வசிக்கும் சர்க்கார் மாளிகை. கலை உணர்ச்சி உள்ளவர்கள் இந்தக் கட்டிடங்களை அவ் வளவு அழகானவை என்று சொல்லமாட்டார்கள். ஆனால் அவற்றின் கம்பீரத்தைப் பற்றி யாரும் குறை கூற முடியாது.

புது தில்லியை நிர்மாணிக்கப் பிளான் போட்டவர் களும், அதைக் கட்டி முடித்தவர்களும் எத்தனையோ நூற்றுண்டுகாலம் புது தில்லி பிரிட்டிஷ் ராஜ்யத்தின் தலைநகராக விளங்கப் போகிறதென்றுதான் எண்ணி யிருப்பார்கள். ஆனால் மனிதர் யாராலும் அறிய முடியாத தெய்வத்தின் சித்தம் வேறுவிதமாயிருந்தது. தில்லி நகரில் ஸ்தாபிதமான எட்டாவது சாம்ராஜ்யம் யாரும் எதிர்பாராத வண்ணம் அதிசீக்கிரத்திலேயே முடிவடைந்து விட்டது. ஆனால் இதற்கு முந்திய சாம்ராஜ்யங்களைப்போல் போர்கள், படுகொலைகள், பயங்கர இரத்த வெள்ளங்கள் ஆகியவற்றோடு பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் முடிவடையவில்லை. அன்பும், ஆனந்தமும் ஐஸ்வாட்டரும் வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தோட நாளது 1948-ம் வருஷம் ஜூன் மாதம் 20-ம் தேதி இரவு பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அமோகமாக முடிவுற்றது.

* * *

சென்ற 1947-ம் வருஷம் ஆகஸ்டு 15உ யன்றே இந்தியா சுதந்திரம் பெற்றது உண்மைதான். அன்றைக்குச் சுதந்திரத் திருநாளை இந்தியா வெங்கும் கொண்டாடியது போல் தில்லியிலும் கொண்டாடினார்கள்.

ஆயினும் லார்ட் மவுண்ட் பாட்டன் கவர்னர்-ஜெனரலாக இருந்து வந்தபடியால் சிலருடைய மனதில் கொஞ்சம் சந்தேகம் இருந்தது. அதி தீவிர வாதிகள் "இன்னும் வெள்ளைக்காரன் போனபாடில்லையே!" என்று சொல்லியும் காட்டினார்கள். இந்த வருஷம் ஜூன் 21உ காலை ராஜாஜி புது தில்லி சிம்மாசனத்தில் அமர்ந்து அந்தக் குறையையும் தீர்த்துவைத்தார்.

லார்ட் மவுண்ட் பாட்டனுக்கு விடை கொடுப்பதற்காக ஜூன் 20உ இரவு நடந்த மகத்தான பிரிவுபசாரப் பார்ட்டியைக் குறித்து முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன்.

அந்தப் பார்ட்டிக்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் 'ஐஸ்' போட்டுக் குளிர்ந்திருந்த தண்ணீர் தாராளமாய் வழங்கப்பட்டது. எட்டாவது சாம்ராஜ்யத்துக்கு விடை கொடுக்கும்போது எல்லாரும் குளிர்ந்த மனதோடு விடை கொடுக்கவேண்டும் அல்லவா?

பெரிய பெரிய கண்ணாடி ஜாடிகளில் ஐஸ் வாட்டர் வைக்கப்பட்டிருந்த இடத்தின் பக்கம் நான் போனேன். ஐஸ் வாட்டர் குடித்த இரண்டு பெரிய உத்தியோகஸ்தர்களின் பேச்சு காதில் விழுந்தது.

“நாளைக்குத்தானே அந்த மனுஷர் உத்தியோகம் ஒப்புக்கொள்கிறார்? இன்றைக்கே பச்சைத் தண்ணீர் வந்துவிட்டதே!” என்றார் ஒருவர்.

“என்ன செய்கிறது? நம்முடைய தலைவிதி!” என்று புலம்பினார் இன்னொருவர்.

இதற்கு முன்னாலே யெல்லாம் கவர்னர்-ஜெனரல் மாளிகையில் விருந்து அல்லது பார்ட்டி என்றால் பல ரகமான மதுபானங்கள் வழங்கப்படுமாம். அதைக் குறிப்பிட்டுத்தான் மேற்படி உத்தியோகஸ்தர்கள் அவ்விதம் சோகமாகப் பேசிக்கொண்டார்கள்.

“என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?” என்று பாரதியார் பாடினார் அல்லவா? அதை நினைத்துக் கொண்டு நானும் ஒரு கிளாஸ் குளிர்ந்த தண்ணீரை வாங்கிக் குடித்தேன். தண்ணீர்த் தாகம், சுதந்திரத் தாகம் இரண்டும் தணிந்தன.

* * *

தனி மனிதர்களின் வாழ்க்கையில் எப்படியோ அப்படியே தேசங்களின் வாழ்க்கையிலும் கஷ்ட சுகங்கள் மாறி மாறி வருகின்றன.

பாரததேசம் நெடுங்காலமாக அன்னியர் ஆட்சியின் கீழ் வனவாசமும் அக்ஞாத வாசமும் செய்து வந்திருக்கிறது. ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகு இப்போது மீண்டும் சுதந்திரம் பெற்றிருக்கிறது.

இந்தியாவின் இயற்கைத் தலைநகரமான தில்லியில் இந்திய சுதந்திர சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இதிகாசமும், சரித்திரமும் போதிக்கும் பாடங்கள் தில்லியின் சுற்றுவட்டாரங்களில் கண் முன்னால் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன; அத்தாட்சியும் கூறு கின்றன. அந்தச் சரித்திரப் பாடங்களின் படிப்பினையை உணர்ந்து இந்திய மக்கள் நடந்து கொள்வார்கள்; அதை உணர்ந்தே இந்திய மக்களின் தலைவர்களும் காரியம் செய்வார்கள்.

ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு சுதந்திர தில்லியில் ஸ்தாபிதமாகியிருக்கும் இந்திய சுதந்திர சாம்ராஜ்யம் ஆயிரம் ஆயிரம் வருஷங்கள் நீடித்து நிலைத்து நிற்கும் என்பது என் நம்பிக்கை.

அஜந்தா மார்க்கம்

1. பயங்கரக் கடிதம்

பத்திரிகைத் தொழிலிலும், பொது வாழ்க்கையிலும் ஈடுபட்டவர்களுக்கு அநாமதேய மொட்டைக் கடிதம் வருவது சர்வ சாதாரணம். எனக்கும் சில சமயம் பயங்கரமான அநாமதேயக் கடிதங்கள் வந்திருக்கின்றன. இதற்கு மாருக, சென்ற 1942-ம் வருஷக் கடைசியில், கையெழுத்துப் போட்ட பயங்கரக் கடிதம் ஒன்று எனக்கு வந்தது! படிக்கும்போதே மயிர்க்கூச்சு எரியும்படியான அந்தக் கடிதம் வருமாறு :—

ஓ கல்கியரே !

நாளை அமாவாசை யன்று நாம் உமது வீட்டுக்கு விஜயம் செய்து உம்மை ரணபத்ரகாளிக்குப் பலி கொடுக்கப் போகிறேம். நீர் ஊரை விட்டு ஓட எண்ணிஞலும் விடமாட்டோம். எங்கே போனலும் தொடர்ந்து வந்து பலிகொடுப்போம். தப்பி ஓடுவதற்கு வீண் முயற்சி செய்யவேண்டாம்.

இங்ஙனம்,

மகா கபாலபைரவர்.

இதைப் படித்ததும் எனக்கு எப்படி யிருந்திருக்கு மென்று நேயர்களே ஊகித்துக்கொள்ளலாம். அடுத்த அமாவாசை எப்போது வரப் போகிறதென்று ஒரே ஆவலாகப் போய்விட்டது! ஊரைவிட்டு ஓடப் பார்க்கும் வீண் பிரயத்தனம் நான் செய்யவில்லை. அமாவாசைக்கு நாலு நாளைக்கு முன்பு வெளியூருக்குப் போக வேண்டி யிருந்த காரியத்தைக்கூட ரத்து செய்துவிட்டேன்.

பிறத்தியாருக்கு வரும் கடிதங்களைப் பார்க்கக் கூடாதென்று மூன்றும் வகுப்பிலேயே போதிக்கப் பட்டிருந்தும், (ஒரு வேளை பள்ளிக்கூடத்தில் போதிக்கப் பட்ட காரணத்தினாலேயோ என்னமோ) பலர் அதற்கு விரோதமாக நடக்கிறார்கள். மேஜைமேல் வைத்திருந்த மேற்படி கடிதத்தை நண்பர் ஒருவர் பார்த்து அந்தரங்க மாக இன்னும் நாலைந்து பேருக்கு மட்டும் சொல்லி வைத்தார். அமாவாசை யன்று அவர்கள் எல்லாரும் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். அப்பால் இப்பால் நகராமல் இராத்திரி பன்னிரெண்டு மணி (பழையமணி) வரையில் இருந்து பார்த்தார்கள். மேலும் இருப்பதற்கு நியாயம் ஒன்றும் இல்லாமல் மனமின்றி விடைபெற்றுக் கொண்டு கிளம்பினார்கள். போகும்போது அவர்களுடைய முகத்தில் காணப்பட்ட ஏமாற்றத்துக்கு அளவில்லை.

ஆனால், அவர்கள் போய்விட்ட பிறகு நடந்ததை நினைத்தால், அவர்கள் போனதே நல்லதாய்ப் போய் விட்டது என்று சொல்லவேண்டும்! ஆஹா! அன்றிரவை நினைத்தாலே எனக்கு ரோமாஞ்சலி உண் டாகிறது. உடம்பின் ஒவ்வொரு அணுவும் பயங்கரத் தினால் சிலிர்க்கிறது.

ஆம் ; அன்று நடு ஜாமத்துக்குப் பிறகு, காத்திருந்த நண்பர்கள் எல்லாம் போய்விட்ட பிறகு, மகா கபாலபைரவர் வரத்தான் செய்தார் ! ஆனால், கடிதத்திலே கண்டபடி நடப்பதற்கு நான் இடங் கொடுக்கவில்லை. அதற்கு நேர்மாறாகக் காரியத்தை நடத்தி விட்டேன்.

அதாவது, மகா கபாலபைரவர் என்னைப் பலி கொடுக்க விடவில்லை.

அவரை நான் பத்திரகாளிக்குப் பலி கொடுத்து விட்டேன்.

அந்தக் காரியத்தில் என்னுடைய கையை நான் கறைப்படுத்திக் கொள்ளவில்லை.

அவருடைய சீடன் சித்திரக் குள்ளனைக்கொண்டு அவரை வாளினால் தீர்த்துவிடப் பண்ணினேன்.

அதாவது, "பார்த்திபன் கனவு" என்ற கதையில், மகா கபால பைரவரைச் சித்திரக் குள்ளன் வெட்டிக் கொல்லும் அத்தியாயத்தை எழுதி முடித்தேன்.

ஆனால், அன்றைய இரவின் பயங்கரங்கள் அத்துடன் முடிந்து விடவில்லை.

மேற்படி அத்தியாயத்தை எழுதி முடித்த பிறகு படுத்துத் தூங்கப் பிரயத்தனப் பட்டேன். வெகுநேரம் வரை தூக்கம் வரவில்லை. கடைசியில் கொஞ்சம் ஏதோ கண்ணிமைகள் கனத்து மூடுவது போலிருந்தது. பாதி விழிப்பும் பாதி தூக்கமுமாயிருந்த அந்த நிலையில், மகா

கபால பைரவரின் கோரமான ஆவி உருவம் வந்து என் முன்னால் நின்றது.

என் உடம்பும், உடம்புக்குள்ளே இரத்தமும், எலும்பும் — எலும்பின் உள்ளேயும் கூட — சிலு சிலுத்தது.

அப்போது, அந்த ஆவி உருவக் கபால பைரவரின் முகத்தில் புன்னகை உண்டானதைக் கண்டு கொஞ்சம் தைரியம் உண்டாயிற்று.

பைரவர் தமது ஒற்றைக் கையினால் என்னை எழுந்து வரும்படியாகச் சமிக்ஞை செய்தார்.

என்னால் மீற முடியாத ஏதோ ஒரு சக்தியினால் கவரப்பட்டவனாய்ப் படுக்கையிலிருந்து எழுந்தேன்.

ஆவி உருவம் முன்னால் செல்ல, நான் பின்னால் சென்றேன். விரைவாக, இன்னும் விரைவாக, மேலும் விரைவாக, மனோவேகத்தையும்விட விரைவாக, வான வெளியில் வடதிசை நோக்கி நாங்கள் யாத்திரை செய்தோம். இவ்விதம் நாங்கள் யாத்திரை செய்த நேரம் ஒரு கணமாகவும் தோன்றியது; அதுவே ஒரு யுகமாகவும் தோன்றியது; முடிவில் ஆகாயத்திலிருந்து கீழே பூமியில் இறங்கினோம்.

நாங்கள் இறங்கிய இடம் மலைப்பிரதேசம். எதிரே அடுக்கடுக்காக மலைத் தொடர்கள் தெரிந்தன.

அவ்விடத்தில் இறங்கியவுடனே கபால பைரவர் தன்னுடைய ஒற்றைக் கையினால் தரையிலே சுட்டிக்

1300.
031:6H9Y3:13
ERSITY EXTENSION

காட்டினார். அவர் காட்டிய இடத்தை உற்றுப் பார்த்தேன்.

ஆஹா ! என்ன கோரம் ! என்ன பயங்கரம் ! ஒரு தளித்த கை, தோளினருகில் துண்டிக்கப்பட்ட ஒரு கை, அங்கே கிடந்தது !

பைரவரின் முகத்தில் புன்னகை இன்னும் விசாலமாக மலர்ந்தது. அவர் குனிந்தார். என்ன செய்யப் போகிறார் என்று நான் சொல்ல முடியாத வியப்புடனும், அருவருப்புடனும் பார்த்துக்கொண் டிருந்தேன். பைரவர் குனிந்த உடனே, கீழே கிடந்த கை நிமிர்ந்து எழுந்து அவர் தோளிலே ஒட்டிக் கொண்டது.

ஒற்றைக் கையுடனே தரையில் குனிந்த கபால பைரவர் இரண்டு நீண்ட கரங்களுடன் எழுந்து நின்றார் !

அடி வயிற்றிலிருந்து வருவது போன்ற அவருடைய ஆழ்ந்த குரலில் "வந்தனம் ; என்னைப் பலி கொடுத்த தற்காக ரொம்ப வந்தனம்" என்றார்.

நான் திகைத்து நின்றேன்.

" போய் வருகிறேன் ; மறுபடியும் வந்தனம் " என்றார்.

" எங்கே போகிறீர்கள் ! இது என்ன இடம் ?" என்று கேட்டேன்.

"இதுதான் அஜந்தா மலை; மலைக்குள்ளே இருக்கும் குகை மண்டபங்களுக்குப் போகிறேன். என்னைக் கொன்றதற்காக மறுபடியும் வந்தனம்" என்றார்.

அஜந்தா என்றதும், எனக்குச் சொல்லமுடியாத ஆவல் உண்டாயிற்று. "நானும் உள்ளே வரலாமா?" என்றேன்.

"என்னுடைய பூர்வ சரித்திரத்தையும் எழுதுகிறாயா?" என்றார் பைரவர்.

"கட்டாயம் எழுதுகிறேன்" என்றேன்.

பின் தொடரும்படி கையினால் சமிக்ஞை செய்துவிட்டு, கபால பைரவர் மலைக்கணவாய்க் குள்ளே புகுந்தார்.

அரைத் தூக்கத்திலிருந்து ஆழ்ந்த நித்திரைக்குள் நானும் புகுந்தேன்.

* * *

அன்று முதல், அஜந்தாவுக்குப் போகவேண்டுமென்ற ஆசை என் உள்ளத்தில் பெருகிக் கொண்டு இருந்தது.

"சிவகாமியின் சபதம்" எழுத ஆரம்பித்ததிலிருந்து அந்த ஆசை இன்னும் அதிகமாயிற்று. கதை முடிவதற்குள்ளே கட்டாயம் அஜந்தா போய் வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இல்லாவிட்டால், கபால பைரவருக்கு நான் அளித்த வாக்கை எப்படி நிறைவேற்ற முடியும்?

2. அழியாச் சித்திரம்

பத்து வருஷத்துக்கு முன்னால் நானும் சில நண்பர்களும் மாமல்லபுரம் போயிருந்தோம். அந்தக் கனவு உலகத்தில் இரண்டு தினங்கள் தங்கி இருந்தோம். குன்றுகளைக் குடைந்து கோயில்களாகச் செய்திருந்த அதிசயத்தைக் கண்டோம். பாறைச் சுவர்களை எல்லாம் அற்புத உயிர்ச் சிற்பங்களினால் அலங்கரித்திருந்த விந்தையைக் கண்டோம். அங்கேதான் முதன் முதலில் எனக்கு இராஜ வம்சத்துச் சிநேகம் ஏற்பட்டது. ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கனவு லோகத்தைச் சிருஷ்டித்த பல்லவ சக்கரவர்த்திகளான மகேந்திரவர்மனும், நரசிம்மவர்மனும் எனக்கு அத்தியந்த சிநேகிதர்களாகி விட்டார்கள்!

மாமல்லபுரத்துச் சிற்பங்களைப் போல் இன்னும் எங்கேயாவது உண்டா என்று விசாரிக்கத் தொடங்கிய போது, ஏறக்குறைய அதே காலத்தில் விந்திய மலையிலிருந்து இலங்கை வரைக்கும் சிற்ப சித்திரக் கலைகள் மகோந்நத மடைந்திருந்தன என்பது தெரிய வந்தது அத்தகைய பூர்வீக பாரத நாட்டின் கலை விந்தைகளுக்குள்ளே, அஜந்தா குகை மண்டபங்கள்தான் தலை சிறந்தவை என்றும், அவை போன்ற அதிசயம் உலகத்திலேயே வேறெங்கும் கிடையாதென்றும் கலை நிபுணர்கள் பலருடைய அபிப்பிராயத்தைப் படித்தேன். இது உண்மையாய்த்தான் இருக்க வேண்டுமென்று இலங்கைப் பிரயாணத்தின்போது எனக்கு நிச்சயமாயிற்று.

இலங்கையில் ஸ்ரீ கிரி ('சிக்ரி') மலையில் செங்குத்தான பாறை முகப்பில் சுமார் நூறு அடி உயரமுள்ள இரும்பு ஏணி ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய நேர் செங்குத்தாக நிற்கும் அந்த ஏணியில் ஏறும்போதே தலை மயக்கம் உண்டாகி விடுகிறது. ஏணியின் உச்சியை அடைந்து அங்குள்ள குகையில் கால் வைத்ததும், "ஐயோ! இதென்ன? அரண்மனை அந்தப்புரத்துக்குள்ளே வந்து விட்டோமே?" என்ற பீதி உண்டாகிறது. சௌந்தர்யமே உருக்கொண்ட இராஜ குமாரி ஒருத்தியும், அவள் பின்னால் தட்டில் பூஜை சாமான்கள் ஏந்திய சேடிகளும் அங்கே காணப்படுகின்றனர். கொஞ்சம் கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்க்கும் போதுதான் அவர்கள் உண்மையான மோகினிப்பெண்கள் அல்ல — சுவரில் எழுதிய சித்திரங்கள் என்று தெரியவருகின்றன. இந்தச் சித்திரங்கள் எல்லாம் அஜந்தா ரகத்தைச் சேர்ந்தவை என்றும் இதைப்போல் எத்தனையோ ஆயிரம் சித்திரங்கள் அஜந்தா குகை மண்டபச் சுவர்களிலே விளங்குகின்றன என்றும் அறிந்தேன்.

3. மன்மாத் ஜங்ஷன்

அது, இது, எல்லாமாகச் சேர்ந்து அஜந்தா அதிசயங்களைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் என் மனதில் அளவில்லாமல் பொங்கிக் கொண்டிருந்தது.

எனவே, இந்த வருஷம் ஏப்ரல் மாதத்தில் எனது நண்பர்கள் மீரா யாத்திரை கிளம்பிய சந்தர்ப்பத்தை

உபயோகித்துக்கொண்டு, நானும் அஜந்தாப் பிரயாணம் கிளம்பினேன்.

அஜந்தாவைப்பற்றிய யாத்திரைப் புத்தகங்களைப் படித்தால், அஜந்தா நைஜாம் இராஜ்யத்தில் இருக்கிறதென்றும், அவுரங்காபாத் ஸ்டேஷனில் இறங்கி மோட்டாரில்போகவேண்டுமென்றும் எழுதியிருப்பதைக் காணலாம். நைஜாம் ராஜ்யத்தில் அவுரங்காபாத் என்றதும், நமக்கு எப்படியோ ஸெகந்தராபாத் ஞாபகம் வந்து, அதற்கு அக்கம் பக்கத்தில் அஜந்தா எங்கேயோ இருப்பதாக எதிர்பார்க்கத் தோன்றும். உண்மையில் அவுரங்காபாத் என்னும் **ஊர்**, ஹைதராபாத் அல்லது ஸெகந்தராபாத்தைக் காட்டிலும் பம்பாய்க்குத்தான் அருகில் இருக்கிறது. பம்பாய் வழியாக அங்கே போவதுதான் சௌகரியமானது. பம்பாயிலிருந்து நாகபுரி போகும் ரயிலில் ஏறிச்சென்று, மன்மாத் ஜங்ஷனில் வண்டி மாற்றவேண்டும். "**மன்மாத்தில் வண்டி மாற்ற வேண்டும்**" என்று சொல்வது என்னவோ, சுலபந்தான்; ஆனால் அதைக் காரியத்தில் நடத்துவது அப்படியல்ல. இரவெல்லாம் கண்விழித்திருக்கவும், பன்னிரண்டு மணி ரயிலுக்காக காலை நாலு மணிவரையில் காத்திருக்கவும், ஒரு லட்சம் மூட்டைப் பூச்சிகளால் கடிக்கப்படவும், ஸ்டேஷன் மாஸ்டர், டிரைவர், கார்டு, போர்ட்டர்கள் எல்லாருடனும் யுத்தம் செய்யவும், சகோதரப் பிரயாணிகளுடன் குஸ்தி போடவும் தயாரா இருப்பவர்கள்தான் இந்த நாளில் மன்மாத் ஜங்ஷனில் ரயில் இறங்கி ஏற முடியும். என்னுடன் வந்த கோஷ்டியில் அநேகருக்கு

மன்மாத்திலேயே அஜந்தாவைப் பார்க்கும் ஆசை பாதிக்குமேல் குறைந்துபோய் விட்டது.

" அஜந்தாவில் அப்படி ஒன்றும் பிரமாத அதிசயம் ஒன்றும் இல்லையாமே ?" என்றார் ஒருவர்.

" சித்திரம் எழுதியிருக்கும் குகைகளிலே ஒரே கும்பிருட்டா யிருக்குமாம். ஒன்றுமே கண்ணுக்குத் தெரியாதாம் !" என்றார் இன்னொருவர்.

" அஜந்தா பார்க்கவேணுமென்றால், அதற்கு இப்படியெல்லாம் கன்னாபின்னாவென்று வரக்கூடாது, அதற்கு வரவேண்டிய விதமே வேறே !" என்றார் ஒருவர்.

" எனக்கு டைபாய்டு சுரம் வரும் போலிருக்கிறது ! அவுரங்காபாத்தில் வந்து செத்துப்போனால், மந்திரம் செய்வதற்குப் புரோகிதர் கிடைப்பாரோ ?" என்று ஒருவர் கவலைப்பட்டார்.

மன்மாத்திலிருந்து திரும்பிப் பம்பாய்க்குப் போக மறுநாள் மத்தியானத்துக்கு மேலேதான் வண்டி என்று தெரிந்த பிறகு, மன்மாத்தில் மூட்டைப்பூச்சி கடித்துச் சாவதைவிட அவுரங்காபாத்திலேயே புரோகிதர் இல்லாமல் சாகலாம் என்று தீர்மானித்து எப்படியோ ரயில் ஏறிவிட்டோம்.

4. அவுரங்காபாத்

அவுரங்காபாத்தில் நாங்கள் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக எல்லாம் நடந்தது என்பதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது புரோகிதரைத் தேட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இதற்குக் காரணம் அந்த ஊரில் வசிக்கும் ஸ்ரீ கே. என். ராஜன் என்னும் ஆசாமிதான். இவர் மைசூரில் பிரசித்தி பெற்ற திவான் களில் ஒருவராயிருந்த ஸ்ரீ சேஷாத்திரி அய்யரின் புதல்வர். அவுரங்காபாத்தில் பெரிய ஆலை வைத்து நடத்துகிறார். இவருடைய வீட்டில் நாங்கள் — மீரா யாத்திரை கோஷ்டி உள்படத்—தங்கினோம்.

ஸ்ரீ கே. என். ராஜன், வெளித் தோற்றத்தில் வெகுளியான 'பெரிய' மனிதராகத் தோன்றுகிறார். ஆனால் அவர் எங்களைப் படுத்தி வைத்தபாடு கொஞ்ச நஞ்சமல்ல. முதலில், வீட்டுக்குள் நுழைந்ததும், அவர், "உங்களுக்கு இங்கே ரொம்ப அசௌகரியமாய்த்தான் இருக்கும். பொறுத்துக்கொள்ள வேண்டியது. இந்த வீட்டில் யார் யாருக்கு எங்கே சௌகரியமோ அங்கே இருந்து கொள்ளலாம்" என்று சொன்னார். உடனே அவரவர்களும் படுக்கையை எடுத்துக் கொண்டு அங்கங்கே போய் இடம் பிடித்துக் கொண்டார்கள். பிறகு ஒருவரையொருவர் பார்ப்பதே பிரம்மப் பிரயத் தனமாகிவிட்டது. அவ்வளவு சின்ன வீடு! ஒரு மூலையிலிருந்து கூச்சல் போட்டால், இன்னொரு மூலையி லிருப்பவர்களுக்குக் கேட்காது.

இன்னும் அந்த மனுஷர் எங்களுக்குச் செய்த அசௌகரியங்களைச் சொல்லி முடியாது. அரிசிச் சாதம் வேண்டியவர்களுக்கு அரிசிச் சாதம்; கோதுமை ரொட்டி வேண்டியவர்களுக்குக் கோதுமை ரொட்டி; பழமும் பாலும் வேண்டியவர்களுக்குப் பழமும் பாலும்; உபவாசம் விரும்பியவர்களுக்கு உபவாசம்; காரம் வேண்டியவர்களுக்குக் காரம்; காப்பி வேண்டியவர்களுக்குக் காப்பி; டீ, கோக்கோ, ஸோடா, உஷ்ணோதகம், சுத்த ஜலம், ஐஸ் வாட்டர் வேண்டியவர்களுக்கு அவரவர்கள் இஷ்டப்படி!

இவ்வளவுடன் நாங்கள் வந்த காரியத்துக்கான அசௌகரியங்களைச் செய்து கொடுக்கவும் அவர் பின் வாங்கவில்லை. அதாவது எல்லோராவுக்கு பஸ்; அஜந்தாவுக்கு டாக்ஸி; இரண்டு இடத்துக்கும் கட்டுச்சாதம்; அந்தந்த இடங்களைப் பற்றிய வர்ணனைகளும் விவரங்களும் சித்திரப் படங்களும் அடங்கிய புத்தகங்கள் முதலியன.

நான் யாத்திரையாகப் போகும் இடங்களில் எல்லாம் இம்மாதிரி அசௌகரியங்களைச் செய்து தரக்கூடிய ஒரு மனிதர் இருந்தால் போதுமென்று பகவானிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

•

எல்லோரா, அஜந்தா என்னும் இரண்டு இடங்களைப் பற்றிக் குறிப்பிட்டேனல்லவா? இரண்டும் பெயர்போன இடங்கள்தான். எல்லோராவிலே நமது புராதன சிற்பக்கலையின் மகோந்நதத்தைக் காணலாம்.

அஜந்தாவிலோ சிற்பத்துடன் சித்திரக் கலையும் மகோந்நதம் அடைந்திருக்கிறது. எல்லோரா, அவுரங்கா பாத்திலிருந்து வடமேற்கே பதினாலு கல். அஜந்தா, அவுரங்காபாத்திலிருந்து ஏறக்குறைய நேர் வடக்கே சுமார் அறுபது மைல்.

5. அதோ எல்லோரா!

"அதோ எல்லோரா!" என்று பஸ் கண்டக்டர் சொன்னதும், அவன் காட்டிய திசையை நோக்கினேம். செங்குத்தான சுவர் மாதிரி ஒரு விசாலமான மலைப்பாறை நீள நெடுக நின்றுகொண்டிருந்தது. அதில் அங்கங்கே பழைய காலத்துச் சாளர வாசல்கள் மாதிரி தென் பட்டன.

இந்தப் பாறைச் சுவரின் நீளம் வடக்கு தெற்காகச் சுமார் ஒன்றேகால் மைல் நீளம் என்று தெரிந்து கொண்டோம்.

சாளர வாசல்கள் மாதிரி தென்பட்டவைதான் மலையில் குடைந்த குகைக் கோயில்களின் வாசல்கள் என்று தெரிந்தது. அம்மாதிரி வாசல்கள் எத்தனை என்று எண்ணிப் பார்த்தோம். கணக்கு ஒன்றும் சரியாக வரவில்லை. எனவே, ஸ்ரீ ராஜன் கொடுத்த புத்தகத்தைப் பார்த்து மொத்தம் 33 குகைக் கோயில்கள் என்று தெரிந்து கொண்டோம். இவற்றில் தெற்கு முனையி லிருந்து 12 குகைகள புத்த மதக் குகைகள் ; நடுவில் 17 ஹிந்து மதக் குகைகள் ; வடக்கே 5 ஜைன மதக்

குகைகள் ; மொத்தம் எவ்வளவு ஆகிறது ? முப்பத்து நாலா ? ஒன்று எப்படி அதிகமாயிற்று ? அடுத்ததடவை எல்லோராவுக்குப் போய்ப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் !

பஸ் போய் நின்ற இடம், கிட்டத்தட்ட அந்தப் பாறையின் நடுமத்தியிலிருக்கும் கைலாஸ நாதர் குகைக் கோயிலுக்கு எதிரே உள்ள மரத்தடி. அந்தக் கோயில் வாசலில் ஒரு ஆசாமி சாவகாசமாக உட்கார்ந்திருந்தான். எங்களைப்போல் யாத்திரை வருபவர்களின் பிராணனை வாங்குவதற்கென்று ஏற்பட்ட வழிகாட்டி அவன்தான் என்று தெரிந்துகொண்டு, அவனிடம் " குகைகளைப் பார்க்க வேண்டும் !" என்றோம். " என்ன அவசரம் ? உட்கார்ந்து சிரமபரிகாரம் செய்து கொள்ளுங்கள் " என்றான் அந்த ஆசாமி. " எங்களுக்குக் கொஞ்சம் அவசரந்தான். குகைகளை எவ்வளவு நேரத்தில் பார்க்கலாம் ?" என்றோம்.

அந்த ஆசாமி வாயிலிருந்த பீடியைச் சாவகாசமாகக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு, " மூன்று மாதத்திற்குள் முப்பத்து மூன்று குகைகளையும் பார்த்து முடித்து விடலாம் " என்றான்.

" எங்களுக்கு மூன்று மணி நேரந்தான் இருக்கிறது. அதற்குள் பார்த்தாக வேண்டும் !" என்றோம்.

" அப்படியும் பார்க்கலாம். ரகத்துக்கு ஒன்றாக ஹிந்து கோயில் ஒன்று, புத்தர் கோயில் ஒன்று, ஜைனர்

கோயில் ஒன்று—ஆக மூன்று கோயில் பார்த்தால் எல்லாம் பார்த்தபடிதான் " என்று கூறி, அவை இன்னின்ன நம்பர் குகை என்று சொல்ல ஆரம்பித்தான்.

பார்க்கவேண்டிய ஹிந்து கோயில் நாங்கள் நின்ற இடத்தில் உள்ளதுதான் என்று தெரிந்துகொண்டு கோயிலுக்குள்ளே பிரவேசித்தோம். பிரவேசித்தது தான் தாமதம்; அப்படியே அசந்து போய் உட்கார்ந்து விட்டோம். அப்பேர்பட்ட அற்புதமான காட்சி எங்கள் எதிரில் தென்பட்டது.

அதை எழுத்தில் வர்ணிப்பது முடியாத காரியம். வர்ணித்தாலும் படிப்பவர்களின் மனக்கண் முன்னுல் அந்தக் காட்சியைக் கொண்டு வருவது அசாத்தியம். ஏன்? பத்திரிகைகளில் வெளியாகியிருக்கும் புகைப் படங்களைக் கொண்டுகூட அந்த எல்லோரா கைலாஸ நாதர் கோயில் காட்சியை உருவகப் படுத்திக் கொள்ளுதல் அசாத்தியமான காரியந்தான்.

புகைப் படத்தில் அந்த ஸ்தம்பத்துக்கு அருகிலுள்ள யானையைப் பார்க்கும்போது என்ன தோன்றுகிறது? ஏதோ குழந்தைகள் விளையாடுவதற்குரிய பொம்மை யானை,—தும்பிக்கை ஒடிந்து போயிருக்கிறது என்று தோன்றுகிறதல்லவா? அதன் அருகில் போய்ப் பார்த்தால் உண்மை தெரியும்;—யானையின் ஒரு காலை நமது இரண்டு கைகளினுலும் தழுவிப் பிடிக்க முடியாதென்று!

அப்புறம் அந்த துவஜ ஸ்தம்பத்தைத்தான் பாருங்கள்! ஏதோ ஒரு சுண்டு விரல் பருமனும் அவ்வளவு உயரமும் உள்ள பொம்மை ஸ்தம்பமாகத் தோன்றுகிறதல்லவா? அருகில் போய் நின்று அண்ணாந்து பார்த்துக் கழுத்து வலிக்கும் போதல்லவா உண்மை தெரியும்?

இந்த யானையும் துவஜஸ்தம்பமும் உள்ள இடம் கோயிலின் வடக்குப் பிராகாரத்தின் ஆரம்பம். இந்தப் பிராகாரத்தின் நீளம் சுமார் 250 அடி. இம்மாதிரியே நாலு பக்கமும் விசாலமான பிராகாரங்கள் இருக்கின்றன. தெற்கு பிராகாரத்தின் ஆரம்பத்திலும் ஒரு துவஜஸ்தம்பமும் யானையும் நிற்கின்றன.

இதிலேஎல்லாம் அப்படி என்ன பிரமாத விசேஷம்? நம் ஊரில் கோயில்கள் இல்லையா? பிராகாரங்கள் இல்லையா?

நம் ஊர்க் கோயில்களில் இல்லாத ஒரு விசேஷம் இங்கே உண்டு.

எல்லோராக் கைலாஸக் கோயிலைக் கட்டியவர்கள் செங்கல் சூளை போடவில்லை; சுண்ணும்பைத் தேடவில்லை; சேறு குழைக்கவில்லை; கருங்கல்லை வெட்டிப் பெயர்த்துக் கொண்டு வந்து ஒன்றின் மேல் ஒன்று வைத்து அடுக்கவும் இல்லை.

அல்லது மற்ற குகைக் கோயில்களைப்போல், பாறைச் சுவரின் ஒரு பக்கத்திலிருந்து உள்புறம் குடைந்து கொண்டு போகவும் இல்லை.

பாறையின் உச்சியில்போய் உட்கார்ந்து கொண்டார்கள். அங்கிருந்து கீழே குடைந்து கொண்டுவர ஆரம்பித்தார்கள் !

எவ்வளவு ஆழம் குடைந்தார்கள் தெரியுமா ? தரை மட்டம் வரையில் அதாவது சுமார் 100 அடி ஆழம் குடைந்தார்கள் !

எவ்வளவு நீள அகலம் குடைந்தார்கள் தெரியுமா ? சுமார் இருநூற்றைம்பது அடி நீளமும் அறுபது அடி அகலமும் குடைந்தார்கள்.

இது கோயிலின் ஒரு பிராகாரம் ஆயிற்று. இது மாதிரி நாலு பக்கத்துக்கும் நாலு பிராகாரம் குடைந்து எடுத்தார்கள்.

அப்படிக் குடைந்து எடுத்தபோது, பிராகாரச் சந்திகளில் ஒரு துவஜஸ்தம்பத்துக்கும் ஒரு கல் யானைக்கும் பாறையைத் துண்டாக விட்டு விட்டுக் குடைந்தார்கள்.

இவ்விதம் விட்ட துண்டுப் பாறைகளை துவஜஸ் தம்பாகவும் யானையாகவும் அமைத்தார்கள் !

நாலு பிராகாரத்துக்கும் நடுவிலே விடப்பட்ட மலைப் பகுதியை அற்புத சிற்பங்களுடன் கூடிய கோயிலாக நிர்மாணித்தார்கள். அந்தக் கோயிலின் வெளிச் சுவரை முதுகிலே தாங்கி நிற்பது போன்ற பிரம்மாண்டமான யானை முகங்களையும், யாளி முகங் களையும், சிங்க முகங்களையும் அமைத்தார்கள். அவை

கோயிலைத் தாங்கிக்கொண்டே ஒன்றுக்கொன்று சண்டையிடுவதையும் காட்டினார்கள்.

கோயிலின் மத்தியில் கர்ப்பக்கிருஹம் குடைந்து அமைத்தார்கள். மண்டபங்கள் பல குடைந்து அமைத்தார்கள். மண்டபத்தைத் தாங்குவதற்காக அல்லாமல் அழகுக்காகவென்றே பெரிய பெரிய தூண்களையும் அமைத்தார்கள்.

சாதாரணமான கோயில்களில் காணமுடியாத மேல் மச்சு மண்டபங்களையும் அமைத்தார்கள்.

மேல் மச்சு மண்டபங்களிலிருந்து வாசல் மண்டபத்தின் மச்சுக்கும், பிராகார மண்டபங்களின் மச்சுக்கும் போவதற்கு மேற் பாலங்களை அமைத்தார்கள் !

இவ்வளவும் ஒரு துளி சுண்ணாம்புக்கு அவசியமின்றி மலையைக் குடைந்தே செய்தார்கள் !

அப்படி யென்றால் எவ்வளவு அபூர்வமான வேலை, எவ்வளவு சர்வ ஜாக்கிரதையாகச் செய்திருக்கவேண்டிய வேலை,—என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

6. கல் பேசுகிறது !

அந்த துவஜஸ்தம்பத்தை அமைத்து வரும்போது, கல்லுளியை எவ்வளவு ஜாக்கிரதையாய் உபயோகப் படுத்தியிருக்கவேண்டும்? கொஞ்சம் அஜாக்கிரதையாக உபயோகப்படுத்திப் பாறையிலிருந்து ஒரு பிள்ளல்

அதிகமாக எடுத்துவிட்டால் துவஜஸ்தம்பத்தின் அமைப்பே கெட்டுவிடுமல்லவா ?

துவஜஸ்தம்பத்தின் விஷயம் இப்படியென்றால், அங்கேயுள்ள ஆயிரக்கணக்கான அற்புத சிற்ப வடிவங்களைப் பற்றி என்னவென்று சொல்வது ?

ஆஹா ! அந்தச் சிற்ப வடிவங்களிலேதான் என்ன கம்பீரம் ? எவ்வளவு நுட்பமான முகபாவங்கள் ! உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சிகள் எவ்வளவு தெளிவாக முகத்தில் பிரதிபலிக்கின்றன ? அவையெல்லாம் வெறும் கல் வடிவங்களா ? உயிர் இல்லாச் சிற்பங்களா ? நம்மோடு நேருக்கு நேர் பேசுகின்றனவே ? குலாவுகின்றனவே ? முகமன் கூறி வரவேற்கின்றனவே? இவையெல்லாம் உயிரற்ற சிற்பங்களா ?

இந்தச் சொப்பன உலகத்தைச் சிருஷ்டிக்க எவ்வளவு ஆயிரக்கணக்கான சிற்பிகள் வேலை செய்திருக்க வேண்டும் ? எவ்வளவு நீடித்த காலம் அவர்கள் வேலை செய்திருக்க வேண்டும் ? ஒரு தலை முறையிலே நடந்திருக்கக்கூடிய வேலையா இது ? பல தலைமுறைகளில் நீடித்து நடந்திருக்க வேண்டிய வேலையாக அல்லவா தோன்றுகிறது ? **இவ்வளவு நீண்ட காலத்தில்—குறைந்தபட்சம், நூறுவருஷ காலத்தில்—வேலை செய்த வெவ்வேறு சிற்பிகளில் ஒருவராவது ஒரு பிழையாவது செய்யாமல் அல்லவா தங்கள் வேலையைச் செய்திருக்கிறார்கள் !**

ஆம் ; ஒருவராவது ஒரு பிழையும் இல்லாமல்தான் வேலை செய்திருக்கவேண்டும். இல்லாவிடில் அந்த அற்புத மலைக்கோயில் திருப்பணி முழுதுமே வியர்த்த மாய்ப் போயிருக்கும்.

சித்திரத்தில் ஒரு பிசகு நேர்ந்து விட்டால், அதை அழித்து விட்டு வேறு எழுதிவிடலாம்.

தனிக் கல்லில் சிற்ப வடிவம் செய்யும்போது பிசகு நேர்ந்துவிட்டால், அதைத் தள்ளிவிட்டு வேறு கல்லை எடுத்துக்கொண்டு செய் துவிடலாம்.

ஆனால் மலையில் குடைந்து அமைக்கும் குகைக் கோயிலில் செய்யும் சிற்ப வடிவம் அத்தகையதன்று. பிசகு நேர்ந்தால் நேர்ந்ததுதான். அதைத் திருத்த முடியாது. ஒன்றில் தவறு நேர்ந்தால், எல்லாமே கெட்டுப் போய்விடும்.

அப்படி ஒரு பிழையின்றி, ஒரு தவறுதல் இன்றி, மகா சிற்பிகளால் அமைக்கப்பட்ட சிற்ப வடிவங்கள் எல்லோரா கைலாஸநாதர் கோயிலில் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன !

ஆலயச் சுவர்களின் வெளிப்புறம், உட்புறம், எல்லாம் சிற்ப வடிவங்கள் ; பிராகாரங்களின் பின் சுவர்களில் எல்லாம் வரிசையாகச் சிற்பங்கள் ; மேலே அண்ணாந்து பார்த்தால் சிற்பங்கள் ; திரும்பிப் பின்னால்

பார்த்தால் சிற்பங்கள். பெரிய பிரம்மாண்டமான வடிவங்கள் ; மிகச் சிறு நுட்பமான வேலைப்பாடுகள்.

சிற்ப வடிவங்களில் விளங்கும் பாவத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். பாவம் என்ருல் ஒரு வகையானதல்ல, நிற்கிற நிலையிலே பாவம் ; உடம்பின் அமைப்பிலே பாவம் ; கழுத்தின் வளைவிலே பாவம் ; கையின் நெளிவிலே பாவம் ; கண்ணிலே பாவம் ; இதழ்களிலே பாவம்.

கல்லுக்கு உயிர் ஊட்டி, அதுவும் அழிவில்லாத உயிர் ஊட்டி, நம்முடன் நேருக்கு நேர் பேசவும் கதை சொல்லவும் நடனமாடவும் நாடகமே நடிக்கவும் செய்யும் எல்லோரா சிற்பக்கலையின் சிறப்பை அறிந்து கொள்ள உதாரணத்துக்கு ஒரு சிற்பத்தைப் பார்த்தால் போதும். பத்துத் தலை இராவணன் கைலாஸ கிரியைத் தூக்கியபோது, கைலாஸத்தில் நிகழ்ந்த குழப்பத்தைக் காட்டும் சிற்பம் இது. முகத்திலும் உடம்பின் ஒவ்வொரு நெளிவிலும் பயத்தைப் பிரதிபலிக்கும் தோற்றத்தில் பார்வதிதேவி வெகு இயற்கையாகப் பரமசிவனுடன் போய் ஒட்டிக்கொள்வதும், பார்வதியின் சேடி அங்கிருந்து வெருண்டு ஓடுவதுமான காட்சி உண்மையிலேயே மேற்படி சம்பவம் நம் கண் முன்னுல் நிகழ்வது போன்ற பிரமையை நமக்குக் காண்பிக்கிறது.

இந்தக் கைலாஸக் கோயிலிலுள்ள சிற்பங்களை யெல்லாம் நன்கு ஆராய்ந்து அவற்றின் கதைகளை யெல்லாம் தெரிந்து கொண்டோமானுல், அப்புறம்

ஹிந்து சமயத்தைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்றுமே இராதென்று சொல்லலாம். சிவபெருமானும் விஷ்ணுமூர்த்தியும் பராசக்தியும் எத்தனை எத்தனை தோற்றங் கொண்டிருக்கிறார்களோ, எத்தனை எத்தனை லீலைகள் புரிந்திருக்கிறார்களோ, அவ்வளவையும் இங்கே கல்லிலே பொறித்து வைத்திருக்கிறார்கள். ஏன்? இராமாயணம் மகாபாரதம் ஆகிய இரண்டு பெரும் இதிகாசங்களையும்கூடப் பாறைச் சுவரிலே சிறு சிறு வடிவங்களுடைய விஸ்தாரமான சிற்பக் காட்சியாக அமைத்திருக்கிறார்கள்.

'வழி காட்டி' கூறியது உண்மை என்பதில் சந்தேகமில்லை. இந்த ஒரு கோயிலை நன்கு பார்த்து முடிப்பதற்கே மூன்று மாதம் வேண்டியதுதான்! ஆனால் இந்த உலகத்திலே நாம் செய்யவேண்டிய வேறு சில காரியங்களும் இருப்பதால், கைலாஸத்திலிருந்து கிளம்ப வேண்டியதாயிற்று. மேலும் இன்னொரு தடவை நமக்கெல்லாம் கைலாஸ யாத்திரை எப்படியும் இருக்கவே செய்கிறதல்லவா?

7. சிநேக பரம்பரை

அடுத்தாற்போல் புத்த சமயத்தைச் சேர்ந்த "விசுவகர்மா" என்னும் பத்தாவது குகைக் கோயிலைப் பார்த்தோம். பின்னர், ஜைன சமயத்துக்குரிய இருபத்தொன்பதாவது "துமார்லேனா" (அல்லது சீதா நஹானி) கோயிலையும், முப்பத்து மூன்றாவது "இந்திர சபா" கோயிலையும், பார்த்தோம்.

இந்தக் கோயில்களின் கம்பீர சௌந்தரியத்தையும் வேலைப்பாடுகளையும் நன்கு அநுபவிப்பதற்கு இவற்றை முன்னால் பார்த்திருக்க வேண்டுமென்று தோன்றியது. முதலிலே கைலாஸத்தை பார்த்ததினால் மற்ற எதிலும் கவனம் செலுத்துவது கடினமாயிருந்தது.

இந்தக் குகைக் கோயில்களில் மண்டபங்கள், தூண்கள் எல்லாம் பிரமாதந்தான். ஆனால் சிற்பங்களின் விஷயத்தில், கைலாஸச் சிற்பத்துக்கும் புத்த-ஜைன சிற்பங்களுக்கும் ஒரு வித்தியாசம் இருந்தது.

கைலாஸச் சிற்பங்களில், இது என்ன வடிவம், அது என்ன காட்சி என்று கவனித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். புத்த குகைக் கோயில்களில் நல்ல வேளையாக இந்தத் தொந்தரவு கிடையாது. உதாரணமாக, 'விசுவகர்மா' வில் நாங்கள் பார்த்த சிற்பங்களை வரிசையாகச் சொல்கிறேன்:—

(1) புத்தர்—முதல் பதிப்பு

(2) புத்தர்—இரண்டாம் பதிப்பு

(3) புத்தர்—மூன்றும் பதிப்பு

(4) புத்தர்—நாலாம் பதிப்பு

(5) புத்தர்—ஐந்தாம் பதிப்பு.

இந்த மாதிரி பன்னிரண்டு, இருபத்து நாலு, நூற்றெட்டுப் பதிப்புக்கள்கூடச் சில கோயில்களில் காணப்படுகின்றன.

இதேவிதமாக, ஜைனர் குகைக் கோயில்களிலும், ஜைன வடிவங்களே பற்பல பெயர்களுடன் விளங்கு கின்றன. அபூர்வமாக, கோயில் வெளிப் புறங்களில் இந்திரன், இந்திராணி முதலிய அரிய சிற்ப வடிவங் களும் காணப்படுகின்றன.

எல்லோரா குகைக் கோயில்களைப் பார்க்கும்போது, நமக்கு முக்கியமாகத் தோன்றும் எண்ணம் என்ன வென்றால், நமது தேசத்தில் ஹிந்துக்களும் பௌத்தர் களும் ஜைனர்களும் எப்போதுமே சண்டை போட்டுக் கொண்டிருக்கவில்லை, பரஸ்பர சினேக பாவத்துடன் வாழ்ந்த காலமும் உண்டு என்பதுதான். இல்லாவிட்டால், ஒரே மலையிலே நடு நாயகமாக ஹிந்து மதக் கோயில் களும், இரண்டு பக்கங்களிலும் பௌத்த ஜைனக் கோயில்களும் அமைக்கப்படுதல் சாத்தியமா யிருந்திரா தல்லவா ?

எல்லோரா விந்தைகளைப் பார்த்த பிறகு, "இதைக் காட்டிலும் பெரிய அதிசயம் அஜந்தாவில் என்ன இருக்கப் போகிறது ?" என்றுதான் தோன்றியது. அது எவ்வளவு தவறான எண்ணம் என்பது மறுநாள் அஜந்தாவில் தெரிய வந்தது.

அவ்விதம் எல்லோரா விந்தைகளைத் தோற்கடித்த அஜந்தா அதிசயங்களை வேறு கட்டுரையில் கூறி யிருக்கிறேன்.*

---

*இக் கட்டுரை "நம் தந்தையர் செய்த விந்தைகள்" என்ற புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சரபோஜியின் கலைக் கோவில்

பழமையான பெருங் குலத்தில் வந்த அரசர் அவர். போர்க்களத்தில் புறமுதுகிடுதலை அறியாத வீரப் பரம்பரையில் பிறந்த மன்னர் அவர். ஆயினும் அவருக்கு இப்போது போரில் நம்பிக்கையில்லை. எதிரிகள் படையெடுத்து வருவதாக அரசரிடம் வந்து சொன்னார்கள். "வரட்டும்; இராஜ்யத்தையும் எடுத்துக் கொள்ளட்டும்; எனக்கு இந்த இராஜ்யம் ஆளுவதைக் காட்டிலும் எவ்வளவோ சந்தோஷம் உண்டாகும் முறையில் மிச்சமுள்ள என் வாழ்நாளைக் கழிப்பேன்" என்றார் அரசர்.

எனவே, கோட்டை விழுந்தது. தலைநகரம் பிடிபட்டது. எதிரிகள் அரசரின் அரண்மனையைச் சூழ்ந்துகொண்டு உள்ளே அரசர் இருப்பார் என்று தேடினார்கள். ஆனால் அரண்மனையில் அரசர் இல்லை. எங்கே போயிருக்கக் கூடும் என்று விசாரித்துத் தெரிந்து கொண்டார்கள். அரசர் இருந்த கட்டிடத்துக்கு விரைந்து சென்றார்கள்.

"இங்கே வந்து என்ன செய்கிறீர்? இங்கே ஒளிந்துகொண்டால் கண்டுபிடிக்கமாட்டோம் என்று எண்ணமா?" என்று படையெடுத்து வந்த பகைவர் சைன்யத்தின் தலைவன் கேட்டான்.

“இங்கே நான் ஒளிந்து கொண்டிருக்க வில்லையே! யாவரும் அறியப் பகிரங்கமாகவே வந்தேன். இங்கே எப்படி ஒளிந்து கொள்ள முடியும்? ஒளிவதற்கு இடம் எங்கே?” என்றார் அரசர்.

“அப்படியானால் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்?” என்று கேட்டான் படைத்தலைவன்.

“தெரியவில்லையா? சுற்று முற்றும் பாருங்கள்!” என்று அரசர் நாலாபுறமும் சுட்டிக் காட்டினார்.

நாலாபுரத்திலும் வரிசை வரிசையாகப் புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன. அச்சிட்ட புத்தகங்கள் ஆயிரக் கணக்கில் இருந்தன. உறுதியான காகிதத்தில் அழகாகக் கையினால் எழுதிய புத்தகங்கள் இருந்தன. ஓலைச் சுவடிகள் ஏராளமாக இருந்தன. சம்ஸ்கிருத ஓலைச் சுவடிகள் முப்பதினாயிரம் இருந்தன. தமிழ் ஓலைச் சுவடிகளும் மகாராஷ்டிர ஓலைச்சுவடிகளும் ஆயிரக் கணக்கில் இருந்தன.

அரசனைத் தேடிக் கொண்டுவந்த பகைவர்கள் அச்சிட்ட புத்தங்களைப்பார்த்து அதிசயப்பட்டார்கள். ஆங்கில பாஷையிலும் பிரஞ்சு பாஷையிலும் ஜெர்மன் பாஷையிலும் அச்சிட்ட ஆயிரக்கணக்கான புத்தகங்கள் இருந்தன. விதவிதமான, அதிசய அதிசயமான புத்த கங்கள் இருந்தன. பிரசித்திபெற்ற இலக்கிய நூல்களும் இருந்தன.

கல்வியில் அந்த அரசருக்கிருந்த ஆர்வத்தைப் பார்த்துப் பகைவர் படைத்தலைவன் அதிசயித்தான்.

அதை ஊர்ஜிதம் செய்து கொள்ளும் பொருட்டு ஒரு கேள்வி கேட்டான். "அரசரே! உம்முடைய ராஜ்யம் பறி போகிற சமயத்தில் இவ்விடம் வந்து உட்கார்ந் திருக்கிறீரே? எதற்காக?" என்றான்.

"இராஜ்யத்தைக் காட்டிலும் இந்தப் புத்தக சாலையே எனக்கு முக்கியமானது. அதனால்தான் கூடுமாயின் இதைக் காப்பாற்றுவதற்காக இங்கே வந்தேன்! வருகிறவர்கள் எப்படிப்பட்ட மனிதர்களோ, இந்தப் புத்தகசாலையை என்ன செய்து விடுவார்களோ என்று கொஞ்சம் பயமாக இருந்தது!" என்றார் அரசர்.

"இங்கிலீஷ் புத்தகங்களும் பிரஞ்சுப் புத்தகங்களும் வைத்திருப்பது சரிதான். ஆனால் வரிசை வரிசையாக, கட்டுக் கட்டாக, பனை ஓலைச் சுவடிகள் வைத்திருக்கிறீர் களே? இவை என்னத்திற்கு? இவற்றையெல்லாம் நெருப்பிலே போட்டுக் கொளுத்தி விடலாம்!" என்றான் படைத் தலைவன்.

"ஐயோ! வேண்டாம்!" என்று அரசர் அலறி விட்டுக் கூறினார்:—"இந்த ஓலைச் சுவடிகள் எல்லாம் விலை மதிக்க முடியாத பொக்கிஷங்கள். எத்தனையோ பணம் செலவு செய்து, எவ்வளவோ அரும்பாடுபட்டு, தேசமெல்லாம் ஆள் அனுப்பித் தேடி, இந்தச் சுவடி களைத் திரட்டிச் சேர்த்தேன். என்னுடைய ராஜ்யத்தை எடுத்துக் கொண்டதுபோல் என் உயிரையும் வேணு மானால் எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் இந்த ஓலைச் சுவடிகளைக் காப்பாற்றுங்கள்!"

அரசருடைய இலக்கியக் காதல் பகைவரின் படைத் தலைவனுக்கு ஆச்சரியமளித்தது. அவரிடம் மரியாதையும் உண்டாயிற்று. ஆனாலும் அவருடன் மீண்டும் வாதமிட விரும்பி, "அப்படி இந்த ஓலைச் சுவடிகளில் என்னதான் அதிசயம் இருக்கிறது?" என்று கேட்டான்.

"இந்த ஓலைச் சுவடிகளில் இலக்கியங்கள் இருக்கின்றன. இதிகாச புராணங்கள் இருக்கின்றன; காவியங்களும் கணித சாஸ்திரங்களும் இருக்கின்றன; அருமையான சங்கீதக் கலை நூல்கள் இருக்கின்றன; ஒப்பற்ற வைத்திய நூல்கள் இருக்கின்றன; அரசியல் சாஸ்திரங்கள் இருக்கின்றன; யுத்த சாஸ்திரங்கள் இருக்கின்றன......" என்று அரசர் அடுக்கிக் கொண்டே போனார்.

"ஓஹோ! யுத்த சாஸ்திரம்கூட இநக்கிறதா? அப்படியானால், படையெடுத்து வரும் பகைவரின் படைகளைத் தடுத்து நிறுத்தும் முறை அந்த சாஸ்திரத்தில் சொல்லப் பட்டிருக்கிறதா?" என்று படைத்தலைவன் கேட்டான்.

"ஆஹா! பகைவர்களைத் தடுக்கப் பலமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒருமுறைப்படி, பகைவர் படைகளில்உள்ள விரர்களையெல்லாம் பைத்தியம்பிடிக்க அடித்து விடலாம். இதோ கொஞ்சம் கேளுங்கள்; இதில் உள்ளதைப் படித்துக் காட்டுகிறேன்!" என்றார் அரசர்.

“படித்துக் காட்ட வேண்டாம். பகைவர்களைப் பைத்தியம் பிடிக்கச்செய்யும் முறை இந்த சாஸ்திரத்தில் இருந்தால், அதை ஏன் நீர் கையாளவில்லை ?” என்று படைத் தலைவன் கேட்டான்.

“ஐயா ! நல்ல கேள்வி கேட்டீர். தெளிந்த அறிவுடன் இருப்பவர்களை இந்த முறைப்படி பைத்தியம் பிடிக்கச் செய்யலாம். ஏற்கெனவே பைத்தியம் பிடித்திருப்பவர்களை ஒன்றும் செய்ய முடியாது !” என்றார் அரசர்.

இதைக் கேட்ட படைத் தலைவனும் அவனுடன் வந்தவர்களும் சிரித்தார்கள். இந்த அரசர் சாதாரண மனிதரல்லவென்றும், காமக் குரோதங்களைக் கடந்து சன்மார்க்க சமநிலை அடைந்த தத்துவஞானி என்றும் உணர்ந்தார்கள்.

புத்தகசாலையும் அதிலிருந்த அச்சுப் புத்தகங்களும் ஓலைச் சுவடிகளும் அபாயமின்றித் தப்பிப் பிழைத்தன.

இந்தப் புத்தகசாலைதான் தஞ்சாவூரில் உள்ள **சரஸ்வதி மஹால்** புத்தக சாலை. அதை ஸ்தாபித்துக் காப்பாற்றிக் கொடுத்த அரசர்தான் சாம்ராட் சிவாஜி வம்சத்தில் வந்த சரபோஜி மகாராஜா.

* * *

மேற்கூறிய நிகழ்ச்சி எவ்வளவு தூரம் சரித்திர ஆதாரம் பெற்றது என்று நிச்சயமாகச் சொல்ல

முடியாது. ஆனால் நிச்சயமாகச் சொல்லக் கூடிய நிகழ்ச்சி இது :—தஞ்சாவூர் ராஜ்யம் பிரிட்டிஷ் ராஜ்யத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்ட சமயத்தில், பிரிட்டிஷ் நிர்வாகி சரபோஜி மகாராஜாவிடம் " நீங்கள் மிக்க நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு ஏதாவது செய்து எங்கள் சந்தோஷத்தை வெளியிட விரும்புகிறோம். என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள் !" என்றார்.

" எனக்கென்று ஒன்றும் செய்ய வேண்டாம். இந்த சரஸ்வதி மஹால் புத்தகசாலையைப் பத்திரமாய்வைத்துக் கொண்டு காப்பாற்றினால் அதுவே போதும் " என்று சொன்னார் சரபோஜி மகாராஜா.

" அது போதாது. உங்களைக் கௌரவப்படுத்த விரும்புகிறோம். உங்களைப் போல ஒரு சிலை செய்து வைக்கிறோம் " என்றார் பிரிட்டிஷ் அதிகாரி.

" என்னைப்போல் சிலை செய்து வைக்கிறீர்களா ? ரொம்ப நல்லது. ஆனால் நான் பயபக்தியுடன் கரங்குவித்துக் கும்பிட்டுக் கொண்டு நிற்பது போலச் சிலை செய்யுங்கள். அதைச் சரஸ்வதி மஹாலின் பிரதான வாசலுக்கு எதிரே நாட்டி வையுங்கள். வருங்கால சந்ததிகளுக்கு என்னைப் பற்றி நினைவு வந்தால், இந்த சரஸ்வதி மஹாலை ஸ்தாபித்தவன் நான் என்பதையே நினைத்துக் கொள்ள வேண்டும் !" என்றார் சரபோஜி மகாராஜா.

அவருடைய விருப்பத்தைப் பிரிட்டிஷ் நிர்வாகிகள் நிறைவேற்றி வைத்தார்கள். சரபோஜி மகா ராஜாவின் கம்பீரமான சிலையை வெள்ளைச் சலவைக் கல்லில் செய்வித்து, சரஸ்வதி மஹாலின் முன் வாசலுக்கு எதிரே ஒரு தனி மண்டபம் கட்டி, அதில் நிலைநாட்டி யிருக்கிறார்கள். அற்புதமான காட்சி! நம் முன்னோர்கள் கலைத் தேவியிடம் கொண்டிருந்த பக்திக்கு ஒப்பற்ற அத்தாட்சியாக விளங்கும் காட்சி!

பிரசித்தி பெற்ற தஞ்சாவூர்ப் பெரிய கோவிலின் மூலம் ராஜராஜசோழனின் பெருமை விளங்குவது போல இந்தச் சரஸ்வதி மஹால் புத்தகசாலையின் மூலம் சரபோஜி மகாராஜாவின் பெருமையும் திகழ்கிறது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த சரஸ்வதி மஹால் புத்தக சாலையைப் பார்க்கும் பாக்கியம் சென்ற மாதத்திலே தான் எனக்குக் கிடைத்தது. இப்போதாவது பார்க்கக் கொடுத்து வைத்ததே என்பதை எண்ணிச் சந்தோஷப் படுகிறேன்.

* * *

சரஸ்வதி மஹால் கட்டிடத்தை நெருங்கும்போது அவ்வளவு அற்புதமான கலைக் கோயிலை நெருங்கு கிறோம் என்ற உணர்ச்சி உண்டாகவில்லை. சரஸ்வதி மஹாலின் சுற்றுப்புறத்தில் தற்சமயம் பிண்ணாக்கு வாசனை ஜமாய்த்துக் கொண்டிருக்கிறது! அக்கம் பக்கம் உள்ள பழைய அரண்மனைக் கட்டிடங்களில்

கூட்டுறவுச் சங்கத்தார் பிண்ணாக்கு மூட்டைகளை அடுக்கி வைத்திருக்கிறார்கள் என்று தெரிந்தது. பிண்ணாக்கையோ அதன் நறுமணத்தையோ குறித்து நான் ஆட்சேபிக்கவில்லை. உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மிக உபயோகமான உரம் அல்லவா பிண்ணாக்கு? ஆனால் அவ்வளவு அருமையான பொருளை வீணாகச் சேர்த்து வைத்திருப்பதைத்தான் ஆட்சேபிக்கிறேன். "இங்கே வருகிற பிண்ணாக்கு மூட்டைகள் திரும்பிப் போகிறதாகவே தெரியவில்லை!" என்றார்கள் என்னுடன் வந்த தஞ்சாவூர் நண்பர்கள். "அப்படியானால் நமது விவசாய மந்திரி கனம் மாதவ மேனனை ஒரு தடவை சரஸ்வதி மஹால் பார்ப்பதற்கு அழைப்பது தானே?" என்று சொன்னேன். "நம்முடைய கல்வி மந்திரி ஒரு தடவை வந்திருந்தார்; அதன் பலன் விபரீதம் ஆயிற்று!" என்றார் ஒரு தஞ்சாவூர்க்காரர். அந்த விபரீதம் என்னவென்பதைச் சிரமப்பட்டு விசாரித்துத் தெரிந்து கொண்டேன்.

கல்வி மந்திரி கனம் அவிநாசிலிங்கம் அவர்களும், அண்ணாச்சி ஸ்ரீ வேதரத்தினம் அவர்களும் அத்தியந்த நண்பர்கள். ஆனால் எதிலாவது அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் காரசாரமாக வாதமிட்டுக் கொள்வார்கள். அண்ணாச்சி அவர்கள்தான் கல்வி மந்திரியைச் சரஸ்வதி மஹால் பார்ப்பதற்கு அழைத்து வந்தவர். சாயங்காலம் இருவரும் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார்கள். கல்வி மந்திரி அவிநாசிலிங்கம் தமது நண்பர் ஸ்ரீ வேதரத்தினத்துக்கும் பொதுவாகத் தஞ்சாவூர்க்காரர்க்கும் ஒரு டோஸ் கொடுக்க விரும்பினார்.

"சின்னதைப் பெரிதாக்குவதில் தஞ்சாவூர்க்காரர்கள் வெகு சமர்த்தர்கள். இன்று காலை **சுவாமிமலைக்குப்** போயிருந்தேன். அங்கே ஒரு சிறு மண் மேடுதான் இருக்கிறது. அதை '**மலை**' என்கிறார்கள். எங்கள் கோயமுத்தூர் ஜில்லாவில் எத்தனை பெரிய மலைகள் இருக்கின்றன தெரியுமா? அதுமாதிரிதான் இந்தச் சரஸ்வதி மஹாலையும் பிரமாதப்படுத்துகிறார்கள்!......" என்று இந்த ரீதியில் கல்வி மந்திரி வெளுத்துக்கட்டினார்.

பிற்பாடு பேச எழுந்த அண்ணாச்சி வேதரத்தினம் கல்வி மந்திரிக்குப் பதில் சொன்னார்:—எங்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் மலைகள் இல்லை என்பது உண்மைதான். அது இயற்கையின் நியதி. இருந்த ஒன்றிரண்டு மலையையும் நாங்கள் கலையாகச் செய்துவிட்டோம். ஆகையால் இப்போது தஞ்சாவூர் ஜில்லாவில் மலை இல்லாமற் போனாலும் கலை நிறைய இருக்கிறது. கோயமுத்தூர் ஜில்லாவில் மலை மட்டும் நிறைய இருக்கிறது; ஆனால் கலை கிடையாது. கலையை அறிந்து அநுபவிக்கும் சக்திகூட கிடையாது....

இப்படியாக அந்த நண்பர்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டார்கள் என்பதை அறிந்து கொண்டேன். நான் தஞ்சாவூர்க்காரனாதலால் அண்ணாச்சி வேதரத்தினத்தின் பதில் எனக்குத் திருப்தியளிப்பது இயற்கையே யல்லவா?

* * *

காலிலே கொதிக்கும் வெந்நீரை விட்டுக்கொண்டு, அதாவது அவசர ஜோலிகள் பலவற்றை வைத்துக்

கொண்டு, சரஸ்வதி மஹாலுக்குள் பிரவேசிக்கிறவர்களுக்கு அப்படி ஒன்றும் பிரமாதமாகத் தெரியாதுதான். "இதோ இவை அச்சுப் புஸ்தகங்கள்! இரண்டாயிரம் புஸ்தகம் இருக்குமா? சரி! இதோ இவை ஓலைச் சுவடிகள்! சமஸ்கிருதச் சுவடிகள் முப்பதினுயிரம்; தமிழ்ச் சுவடிகள் ஆயிரத்துச் சொச்சம்; மகாராஷ்டிரச் சுவடிகள் ஆயிரத்துச் சொச்சம். சரி! அவ்வளவு தானே? போகலாமா?" என்று இவ்விதம் பத்து நிமிஷத்தில் சரஸ்வதி மஹாலைப் பார்த்து விட்டுப் புறப்பட்டுவிடலாம். தஞ்சாவூர்க் கோவிலுக்குப் போய், "ஓஹோ! இதுதான் கோபுரமாக்கும்! இதுதான் கர்ப்பக் கிரஹமாக்கும்! ஓஹோ! இவர்தான் பிரகதீசுவர ஸ்வாமியோ? சரி! இந்தச் சுவரில் எழுதிய சித்திரங்கள் ஆயிரம் வருஷத்துக்கு முந்தியவையோ?—அவ்வளவு தானே? போகலாமா?" என்று கால்மணி நேரத்துக்குள் கோயிலைச் சுற்றிப் பார்த்துவிட்டு வெளியே வந்து விடலாம்.

ஆனல் கலையை அறிந்து அநுபவிக்கும் முறை இதுவல்ல. கலைக்கும் அவசரத்துக்கும் வெகுதூரம். வெளியில் அவசர ஜோலியை வைத்துகொண்டு சரஸ்வதி மஹாலுக்குள் பிரவேசிப்பதில் பயனில்லை.

அவ்விதமின்றிக் கொஞ்சம் சாவகாசமாகவே சரஸ்வதி மஹாலுக்குள் இருக்கும் இலக்கிய கலைச் செல்வங்களைப் பார்த்து அனுபவிப்பது என்று தீர்மானித்துக் கொண்டு அந்தக் கலைக் கோயிலுக்குள் பிரவேசிக்கலாம், வாருங்கள்!

சரஸ்வதி மஹால் புத்தகசாலை உள்ள கட்டிடம் கலைமகள் கோயில் கொண்டு எழுந்தருளுவதற்குத் தகுந்த அழகான கொலு மண்டபமாகும். மண்டபத்திற்குள் பிரவேசித்ததும் அதன் விசாலமும் கம்பீரமும் கவனத்தைக் கவர்கின்றன. பெரிய பெரிய பிரம்மாண்டமான தூண்கள் வரிசை வரிசையாக நின்று மண்டபத்தைத் தாங்குகின்றன. மேலே நோக்கினால் ஒன்றன்பின் ஒன்றாக அழகிய காமன் வளைவுகள் காட்சிதருகின்றன. இந்தக் காலத்துப் புத்தகசாலைகள் எவ்வளவு அழகுணர்ச்சியே அற்ற ஸப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் சாவடியைப் போன்ற கட்டிடங்களில் இருக்கின்றன என்பதைப் பார்த்துவிட்டு, இந்த சரஸ்வதி மஹால் மண்டபத்தையும் பார்த்து மனதிற்குள் ஒப்பிட்டால், "ஆஹா! நம் முன்னோர்கள் கல்விக்கும் கலைக்கும் புத்தகத்துக்கும் எவ்வளவு மகிமை தந்திருந்தார்கள்!" என்ற வியப்பு நிச்சயம் உண்டாகும்.

சரஸ்வதி மஹாலுக்குள் பிரவேசித்ததும் முதலில் இடது பக்கக்கோடிக்கு அழைத்துச் செல்லுகிறார்கள். அங்கே அச்சிட்ட புத்தகங்கள் அடுக்கியிருக்கின்றன. ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, மகாராஷ்டிரம், சமஸ்கிருதம் ஆகிய பல பாஷைகளிலும் சுமார் 9,000 புத்தகங்கள் இருக்கின்றன. ஒன்பதினாயிரம் புத்தகங்களைக் காட்டிலும் அதிகமுள்ள புத்தகசாலைகள் எவ்வளவோ இருப்பது உண்மைதான். ஆனால் சரஸ்வதி மஹால் புத்தகங்களில் விசேஷமென்னவென்றால், அங்குள்ளவை பெரும்பாலும் 120 வருஷங்களுக்கு முன்னால் அச்சிடப்பட்டவையாகும். உதாரணமாக, ஸர் வால்ட்டர் ஸ்காட்

எழுதிய பிரசித்தி பெற்ற சரித்திர நாவல்களின் முதல் பதிப்புப் புத்தகங்களை இங்கே காணலாம். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் புகழ் பெற்ற புராதன ஆசிரியர்களின் முதல் பதிப்பு நூல்களை **ஒன்றுக்கு நூறு மடங்கு** வீதம் அதிக விலை கொடுத்து வாங்குவார்கள்.

அந்தக் காலத்தில் வெளியான ஆங்கில இலக்கிய நூல்களைத் தவிர சரித்திர நூல்கள், விஞ்ஞான நூல்கள் முதலியவை இருக்கின்றன. ஒவ்வொரு புத்தகத்திலும் முதல் பக்கத்தில் சரபோஜி மகாராஜாவின் கையெழுத்தும் புத்தகம் வாங்கப்பட்ட வருஷமும் காணப்படுகின்றன. இதிலிருந்து சரபோஜி மகாராஜா எவ்வளவு சிரத்தையுடன் புத்தகங்களைத் தருவித்துப் படித்து இந்தப் புத்தகநிலையத்தில் சேர்த்து வைத்திருக்க வேண்டும் என்பதை நன்கறியலாம்.

அச்சுப் புத்தகங்களில் ஒரு முக்கியமான பகுதி, படப் புத்தகங்கள். (பாடப் புத்தகங்கள் அல்ல; படங்கள் பிரதானமாக உள்ள புத்தகங்கள்.) இவை **சரஸ்வதி** மஹாலின் வலது கோடியில் விசேஷமாக எடுத்து வைத்துக் காட்டப்படுகின்றன. உலகத்தின் பல தேசங்களிலும் உள்ள புகழ்பெற்ற நகரங்கள், ஸ்தலங்கள்,-இவற்றின் அபூர்வமான சித்திரப் படங்கள் அடங்கிய நாலு அரும்பெரும் புத்தகங்கள் இருக்கின்றன. அசுவ சாஸ்திரம், கஜ சாஸ்திரம் முதலியவற்றைச் சித்திரங்களைக்கொண்டு விளக்கும் அபூர்வ நூல்கள் இருக்கின்றன.

எல்லாவற்றிலும் விசேஷமான சித்திரப் புத்தகம் பிரஞ்சுக்காரர் ஒருவர் எழுதியது. இந்த நூல்முழுவதிலும் மிருகங்கள்—பட்சிகளின் முகத் தோற்றங்களுக்கும் மனிதர்களுடைய முகத் தோற்றங்களுக்கும் உள்ள விசித்திரமான ஒற்றுமையை எடுத்துக் காட்டும் அற்புத சித்திரங்கள் காணப்படுகின்றன. கழுகின் முகத்துக்கும் மனிதன் முகத்துக்கும் விசேஷ ஒற்றுமை உண்டு என்று சொன்னால் சாதாரணமாக நாம் நம்ப முடியாது.

"அது எப்படி இருக்கும்?" என்போம். அதே மாதிரி "அவன் மூஞ்சி ஆட்டு மூஞ்சி மாதிரி இருக்கிறது!" என்று சொன்னால், ஏதோ வசை மொழியாகவே தோன்றும்; உண்மை என்று படாது. ஆனால் இந்தப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தால் நம் கருத்தை மாற்றிக் கொள்ளலாம். பூலோகத்திலுள்ள மனிதர்கள் எல்லோரும் விலங்குகள் பறவைகளின் மறு ஜன்மந்தான் என்று நிச்சயம் அடைவோம்! அந்தப் புத்தகத்திலிருந்து ஒரு பக்கத்துப் படத்தை அப்படியே புகைப்படம் எடுத்து கல்கி இதழில் வெளியிட்டிருக்கிறது. நல்ல வேளையாக மிருகங்களும் பட்சிகளும் அந்தப் படங்களைப் பார்க்க முடியாது என்று எண்ணி நாம் திருப்தி யடையலாம். அவை இப்படங்களைப் பார்க்குமானால் "சே! கேவலம் மனிதர்களுடைய முகங்களைப் போலவா நம்முடைய முகங்கள் இருக்கின்றன! பிரம்மதேவர் இத்தகைய அநீதி செய்து விட்டாரே!" என்று எண்ணி வருத்தப்படக் கூடும் அல்லவா?

* * *

சரஸ்வதி மஹாலில் உள்ள புத்தகங்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்: (1) அச்சுப் புத்தகங்கள்; (2) காகிதத்தில் பேனா மையினால் எழுதிய கையெழுத்துப் புத்தகங்கள்; (3) ஓலைச் சுவடிகள்.— இவற்றில் அச்சுப் புத்தகங்களைப் பற்றி மேலே சொல்லியாகி விட்டது.

கையெழுத்துப் புத்தகங்களின் காகிதம் மிகப் பழமையானது; எனினும், அழுத்தமாயும் அழகாயு மிருக்கிறது. சில கையெழுத்துப் பிரதிகளின் மேலட்டைக் காகிதத்தில் செய்திருக்கும் கோலச் சித்திர வேலைப் பாடுகள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து பிரமிக்கும்படி செய்கின்றன. "புஸ்தகம் ஹஸ்த பூஷணம்" என்னும் வசனத்துக்கேற்பக் கையில் புஸ்தகத்தை எடுத்தால் கைக்கு அது ஒரு ஆபரணமாயும் அலங்காரமாயு மிருக்க வேண்டுமென்ற எண்ணத்துடனேயே அப்படி மேலட்டையில் சித்திர வேலை செய்திருக்கிறார்கள். சாதாரண மனிதர்களின் கைகளுக்கு மட்டுமல்ல; சகலகலா வாணியான சரஸ்வதிதேவியின் திருக்கரத்துக்கே அழகு செய்யக் கூடியவாறு அந்தக் கையெழுத்துப் புத்தகங்களின் மேலட்டையை அலங்கரித்திருக்கிறார்கள்!

சரஸ்வதி மஹாலில் மிக முக்கியமான பகுதி ஓலைச் சுவடிகள் வைத்திருக்கும் பகுதியேயாகும். மரச் சட்டங்களினால் உன்னதமாகச் செய்யப்பட்டிருக்கும் திறந்த அலமாரிகளில் இந்த ஓலைச் சுவடிகள் வரிசை வரிசையாகக் கண்ணுக்கெட்டியவரை அடுக்கி வைக்கப் பட்டிருப்பதைப் பார்த்தால் பிரமிப்பும் வியப்பும்

உண்டாகத்தான் செய்யும். ஆஹா! இத்தனை ஓலைச் சுவடிகளையும் அந்தக்காலத்தில் சேகரிப்பதற்கு எவ்வளவு மகத்தான பிரயத்தனம் செய்திருக்க வேண்டும்?

ஆம்; சரபோஜி மகாராஜா பிரமாத பிரயத்தனங்கள் செய்துதான் இத்தனை ஓலைச் சுவடிகளைச் சேகரித்தார். இராமேசுவரத்திலிருந்து காசிவரையில் ஆட்களை அனுப்பி ஓலைச் சுவடிகளைச் சம்பாதித்து வரும்படி செய்தார். மொத்தம் **அறுபதினாயிரம் பவுன்** செலவு செய்து இந்தப் புத்தகசாலையை அமைத்தார்!

மேலெழுந்த வாரியாகச் சிந்திப்பவர்கள் "இவ்வளவு பிரயத்தனமும் எதற்காக? இத்தனை ஓலைச்சுவடிகளையும் எத்தனை பேர் வாசித்திருக்கப் போகிறார்கள்? வாசித்து அடையும் பிரயோஜனம்தான் என்ன?" என்று கேட்பார்கள்.

கலையையும் கல்வியையும் பொறுத்த காரியங்களில் "இதனால் எத்தனை பேர் பயன் அடைந்தார்கள்?" என்னும் எண்ணிக்கையை முக்கியமாகக் கருதுவதில்லை.

இந்தியா தேசம் ஒரே ஒரு ஸர். சி. வீ. ராமனைத் தான் சென்ற நூறு வருஷத்தில் பெற்றெடுத்திருக்கிறது. ஆயினும் அந்த ஒரு மேதாவியினால் இந்தியா தேசத்துக்கே உலகத்தின் முன்னிலையில் கௌரவம் ஏற்பட்டிருக்கவில்லையா?

லண்டன் நகரில் உள்ள புத்தகசாலையில் ஆயிரக் கணக்கான அபூர்வ சமஸ்கிருத நூல்களும் தமிழ் நூல்களும் இருக்கின்றன. இந்தியாவில் கிடைக்காத சமஸ்கிருத—தமிழ் புத்தகங்கள் பல லண்டன் புத்தக சாலையில் இருக்கின்றன. ஏராளமான செலவு செய்து அந்த நூல்களைச் சேகரித்திருக்கிறார்கள். "என்ன பிரயோஜனம்? எத்தனை பேர் படிக்கிறார்கள்?" என்று கேட்பதில்லை.

அத்தகைய மனோபாவத்துடனேயே சரபோஜி மகா ராஜா அறுபதினாயிரம் பவுன் செலவு செய்து இந்த முப்பதினாயிரத்துச் சொச்சம் ஓலைச் சுவடிகளையும் சேகரம் செய்து வைத்தார். அதன் பயன் என்ன என்பது பற்றிச் சிந்திக்கவில்லை. யார் கண்டார்கள்? ஒரு காலத்தில் யாரேனும் ஒரு உண்மையான கல்விமான் இந்தச் சரஸ்வதி மஹாலுக்கு வரலாம். ஓலைச் சுவடிகளைப் படித்து ஆராய்ச்சி செய்யலாம். முப்பதினாயிரத்துச் சொச்சம் ஓலைச் சுவடிகளில் ஏதேனும் ஒரு சுவடியை அற்புதமான இலக்கியப் பொக்கிஷம் என்பதாகத் தெரிந்துகொண்டு வெளியிடலாம். அத்தகைய ஒரு உண்மை இலக்கிய நூல் கிடைக்குமானால் சரபோஜியின் அவ்வளவு பிரயத்தனமும் பணச் செலவும் பயனளித்தன என்று சொல்லலாம் அல்லவா?

சரபோஜி மகாராஜாவைப் போலவே அவருடைய குமாரர் சிவாஜி ராஜாவும் புத்தகப் பிரியராக இருந்திருக்கிறார். பிரிட்டிஷ் சர்க்கார் செய்த ஏற்பாட்டின்படி சிவாஜி ராஜாவின் வருஷ வருமானம் ஒன்றரை லட்சம்

ரூபாய். இந்தத் தொகையில் எட்டில் ஒரு பங்கை அதாவது இருபத்தோராயிரம் ரூபாயைச் சிவாஜி ராஜா சரஸ்வதி மஹால் புத்தகசாலையின் பராமரிப்புக்காகக் கொடுத்து வந்தார்!

இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் தஞ்சாவூர் ராஜவம்சத்தின் சந்ததிகள் தங்கள் சொத்துக்களைப் பங்கு பிரித்துக் கொண்டபோது, சரஸ்வதி மஹாலையும் அதிலுள்ள புத்தகங்களையும் பிரித்துக் கொள்ளும் யோசனை சொல்லப்பட்டது. சரபோஜியின் வம்சத்தில் பிறந்தவர்கள் அந்த யோசனையை மறுத்து விட்டார்கள். சரஸ்வதி மஹாலைப் பொது மக்களின் உடைமையாக்கியதுடன் அதன் பராமரிப்புக்காக ஒரு லட்சம் ரூபாய் மூலதனம் ஏற்படுத்திஞர்கள். 1918-ல் இந்த ஏற்பாடு அமுலுக்கு வந்தது. மேற்படி தொகை பிரிட்டிஷ் சர்க்கார் கடன் பத்திரங்களில் போடப்பட்டது. முதலில் வட்டி வருஷத்துக்கு ஐயாயிரம் ரூபாய் கிடைத்தது. பின்னுல் வட்டி விகிதம் குறைந்து மூவாயிரத்துச் சொச்சமாயிற்று. இந்தச் சொற்ப வருஷ வருமானத்தைக் கொண்டு சரஸ்வதிமஹால் புத்தகசாலை பராமரிக்கப்பட்டு வந்தது.

சரஸ்வதி மஹாலில் உள்ள புத்தகங்களையும் ஓலைச் சுவடிகளையும் ஒரு வாரத்துக்கு ஒரு தடவை எடுத்துத் தூசு துப்பு தட்டித் திரும்பவும் அடுக்கி வைக்கும் காரியத்துக்கே குறைந்த பட்சம் பத்து ஆட்கள் வேண்டும்! தலைக்கு முப்பது ரூபாய் சம்பளம் கொடுப்பது என்ருல் வருஷத்துக்கு மூவாயிரத்து அறுநூறு ரூபாய் ஆகிவிடும்.

தூசு துப்பு தட்டிவைத்தால் மட்டும் போதுமா? ஓலைச்சுவடிகளின் ஆயுளை நீடிக்கச் செய்வதற்கு அவ்வப்போது மருந்து எண்ணெய் தடவவேண்டும். புத்தகங்களுக்கும் ஓலைச்சுவடிகளுக்கும் சத்துருக்களாகப் பற்பல ஜீவராசிகள் இருக்கின்றன. கறையான், பாச்சை முதலியவை அணுகுண்டு வேகத்தில் ஓலைச்சுவடிகளை உண்டு ஜீரணமும் செய்துவிடும். அரும்பாடுபட்டுத் தேடிச் சேகரித்த ஓலைச்சுவடிகளை மேற்படி ஜீவராசிகள் சாப்பிட்டு விடாமல் காப்பாற்ற வேண்டும். அதற்குரிய திரவ மருந்துகளை அவ்வப்போது தெளிக்கவேண்டும். மருந்துகளைப் பொட்டணம் கட்டி வைக்கவேண்டும்.

சுவடிகளின் சத்துருக்களில் எலிகளை இலேசில் சமாளிக்க முடியாது. சில சமயம் மருந்துப் பொட்டணங்களைச் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிடும். எலிகளை பயமுறுத்தித் துரத்துவதற்கு ஒருவழியை நம் முன்னோர்கள் கையாண்டார்கள். பாம்பு சட்டை உரித்துப்போடும் நுண்ணிய வெண்மையான மேல் தோல் இருக்கிறதல்லவா? அந்தப் பாம்புச் சட்டையை ஆங்காங்கு புத்தக அலமாரிகளில் போட்டு வைத்து எலிகளை மிரண்டு ஓடும்படி செய்து வந்தார்கள்.

மேற்கூறிய முறைகளையெல்லாம் தற்சமயம் சரஸ்வதி மஹால் புத்தகசாலையின் பராமரிப்புக்காகக் கையாண்டு வருகிறார்கள். ஆயினும் என்ன? புத்தகங்களும் சுவடிகளும் வரவரக் கிலமாகிக் கொண்டுதான் வருகின்றன. தொட்டு எடுத்தால் பொலபொலவென்று உதிரக் கூடிய நிலைக்குச் சில ஓலைச் சுவடிகள் வந்திருக்கின்றன!

இத்தகைய சுவடிகளில் ஏதேனும் ஒன்றோ சிலவோ அருமையான இலக்கியப் பொக்கிஷங்களாக இருக்கலாம் அல்லவா ? இவை போய் விட்டால் ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகி விடலாம் அல்லவா ? கடல் கொண்டுபோன பழந்தமிழ் நூல்களைப் பற்றி இப்போது நாம் அழுது புலம்பிக் கொண்டிருப்பது போலச் சரஸ்வதி மகால் சுவடிகளைப் பற்றியும் வருத்தப்பட நேரிடலாம் அல்லவா ?

* * *

கடைசியாக, நமது பிரதம மந்திரி கனம் ஓமந்தூர் ரெட்டியார் அவர்களின் ஆட்சி காலத்தில் சரஸ்வதி மஹால் புத்தகசாலைக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது என்று தோன்றுகிறது.

பிரதம மந்திரி ரெட்டியார் பழமையில் பற்றுடையவர். நமது நாட்டின் பழைய பண்பாடு, பழைய கலைகள், பழைய இலக்கியங்கள் ஆகியவற்றில் மிக்க பக்தி கொண்டவர். ஆதலின் சரஸ்வதி மஹாலில் உள்ள பழைய ஓலைச்சுவடிகளில் எத்தகைய அருமையான கலைச் செல்வங்கள் இருக்கின்றனவோ,—அவையெல்லாம் மக்களுக்குப் பயன்படாமல் அழிந்துவிட்டால் என்ன செய்வது என்ற கவலை கனம் ரெட்டியாருக்கு ஏற்பட்டது. இதன் பயனாக 1947-ம் வருஷம் ஜூன் மீ 2உ சரஸ்வதி மஹால் புத்தகசாலையைக் குறித்து விசாரித்து யோசனை சொல்ல ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டது. இக் கமிட்டியின் தலைவர் பிரபல வக்கீலும் காங்கிரஸ் தியாகியுமான ஸ்ரீ எஸ். கே. சடகோபாச்

சாரியார் எம்.ஏ., பி.எல், அவர்கள். கமிட்டியின் அங்கத்தினர்: சரஸ்வதிமஹால் காரியதரிசி ஸ்ரீ எஸ். கோபாலன், பி.ஏ., பி.எல்., தஞ்சாவூர் ராஜவம்சத்தைச் சேர்ந்த ஸ்ரீ பிரதாபசிம்ம ராஜா, ஸ்ரீ ஏ. வேதரத்தினம் ஆகியவர்கள். சரஸ்வதி மஹாலைப் பற்றிய எல்லா அம்சங்களையும் நன்கு விசாரித்து மேற்படி கமிட்டியார் விரைமான அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே பழுதுபடத் தொடங்கி இருப்பதால் உடனே எழுத்துப் பிரதி செய்ய வேண்டிய ஓலைச்சுவடிகளும் காகிதக் கையெழுத்து நூல்களும் 327 இருக்கின்றன என்றும், இவற்றைத் தவிர கூடிய சீக்கிரத்தில் பிரதி செய்ய வேண்டிய நூல்கள் 3,500 இருக்கின்றன என்றும் கமிட்டியார் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த வேலையை நாலு வருஷத்தில் செய்வதற்கு வேண்டிய சிப்பந்திகள் இவ்வளவு பேர் என்பதையும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய குறைந்த பட்ச சம்பளத்தையும் மதிப்பிட்டு முதல் வருஷத்தில் 93,380 ரூபாயும் இரண்டாவது வருஷத்தில் 58,880 ரூபாயும் சர்க்கார் கொடுத்தால் முக்கியமான 3,827 நூல்களை வீணாய்ப் போகாமல் காப்பாற்றலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த அறிக்கையின் பேரில் சென்னை சர்க்கார் சென்ற வருஷத்தில் இருபதினாயிரம் ரூபாய் அநுமதித்தார்களாம். பிறகு, சிக்கனத்தை முன்னிட்டு அதை ஆறாயிரமாகச் செய்து விட்டார்களாம்!

இந்த வருஷத்தில் நமது பிரதம மந்திரியின் பிடிவாதத்தின்பேரில் சரஸ்வதிமஹாலுக்கும் சென்னையி லுள்ள ஓரியண்டல் லைப்ரரிக்குமாகச் சேர்த்து ஒரு லட்ச ரூபாய் அனுமதித்திருப்பதாகத் தெரிகிறது. அனுமதித்த தொகை உரிய காலத்தில் போய்ச் சேர வேண்டும். போய்ச் சேர்ந்து சரியான முறையில் வேலை தொடங்கி நடக்க வேண்டும்.

* * *

இத்தனை காலங் கழித்துத் தஞ்சை சரஸ்வதி மஹால் புத்தக சாலையைப் பார்க்கும் பேறு பிரதமமந்திரி ரெட்டியார் அவர்களின் ஊக்கத்தினால்தான் எனக்குக் கிடைத்தது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டு நன்றி செலுத்துகிறேன்.

சரஸ்வதி மாஹலில் உள்ள அத்தனை ஓலைச் சுவடி களையும் கையெழுத்துப் பிரதிகளையும் காப்பாற்றி மக்களுக்குப் பயன்படும்படி செய்துவிட வேண்டு மென்பது பிரதம மந்திரி ரெட்டியாரின் ஆசை. இந்தப் பெரிய திருப்பணிக்காக இந்திய சர்க்காரிடம் முப்பது லட்சம் ரூபாய் நன்கொடை கோரியிருக்கிறார்.

முக்கியமாக, சரஸ்வதி மஹாலில் உள்ள சித்த வைத்திய நூல்களைப் பெயர்த்தெழுதி அச்சுப் போட்டு விடவேண்டும் என்று பிரதமர் ரெட்டியார் விரும்புகிறார்.

சித்த வைத்தியத்தில் நம் பிரதமருக்குப் பரி பூரண நம்பிக்கையும் ஆர்வமும் உண்டு. தமிழ் நாட்டில் முன் காலத்தில் வாழ்ந்த சித்த புருஷர்கள் தங்களுடைய

யோகசித்தியினாலும் ஞான சக்தியினாலும் மனிதர்களுக்கு வரக்கூடிய பல ரோகங்களுக்கு ஔஷதங்களைக் கண்டு பிடித்துப் பாடலாக எழுதி வைத்திருக்கிறார்கள். எளிய தமிழ்ப் பாடல்கள்தான் என்றாலும், அவற்றில் உள்ள சிகிச்சை முறைகளையும் ஔஷத முறைகளையும் தெரிந்து கொள்வதற்குச் சித்தவைத்திய சாஸ்திர ஞானம் வேண்டும். சிற்சில மர்மமான சொற்களுக்குப் பொருள் தெரிந்தவர்கள்தான் மேற்படி பாடல்களுக்கு அர்த்தம் செய்யலாம். மற்றவர்கள் செய்யும் அர்த்தம் அனர்த்தமாக முடியக்கூடும்.

சித்த வைத்திய மர்மப் பிரயோகங்களுக்குப் பொருள் தெரிந்தவர்கள் வெகு சிலர்தான் இப்போது இருக்கிறார்கள். அவர்களும் மறைந்து விட்டால் பிறகு அந்த அருமையான நூல்கள் எல்லாம் வியர்த்தமாகப் போய்விடும்.—இவ்விதம் பிரதம மந்திரி ரெட்டியார் கருதுவதால் உடனே சித்த வைத்திய நூல்கள் எல்லாவற்றையும் அச்சிட்டுவிட வேண்டும் என்று விரும்புகிறார்.

இது விஷயத்தில் தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு அச்சுக்கூடமும் உதவி செய்யவேண்டும் என்று கோருகிறார். ஒன்று அல்லது இரண்டு புத்தகங்களைத் தமிழகத்திலுள்ள ஒவ்வொரு அச்சுக்கூடமும் அச்சிட்டுக் கொடுக்க ஒப்புக் கொண்டால் காரியம் விரைவாக நடந்தேறக்கூடும். ஏதாவது ஒரு அச்சுக்கூடத்தையே நம்பியிருந்தால் நம்முடைய தலைமுறையில் நடைபெறாது. இந்த மந்திரி சபையின் ஆட்சியில் நடைபெறாது என்று சொல்லவே வேண்டியதில்லை.

* * *

சரஸ்வதி மஹால் புத்தகசாலையை நிர்வகிப்பதற்கு இப்போது ஒரு சபை இருக்கிறது. சர்க்கார் நியமித்த சபைதான். இதன் காரியதரிசி ஸ்ரீ எஸ். கோபாலன் பி.ஏ., பி.எல்., விசேஷமான கல்விப் பற்றும் சரித்திர ஆராய்ச்சிப்பற்றும் உடையவர். சரஸ்வதி மஹால் நிர்வாகத்தின் பொறுப்பைப் பல வருஷ காலமாக ஏற்று நடத்தி வருகிறார்.

சென்ற வருஷத்திலிருந்து ஸ்ரீ கே. வாஸுதேவ சாஸ்திரி பி.ஏ. 'சரஸ்வதி மஹால் ஆராய்ச்சியாளர்' என்னும் பெரிய பட்டத்துடன் தொண்டு செய்து வருகிறார். பட்டம் பெரிதேயொழியச் சம்பளம் ரூபாய் எண்பதுதான்.

இன்னொரு பி.ஏ. பட்டதாரி பல வருஷ காலமாகச் சொற்ப சம்பளத்தில் சரஸ்வதி மஹால் லைப்ரேரியன் உத்தியோகம் பார்த்து வருகிறார்.

சரஸ்வதி மஹால் புத்தகசாலையைப் பார்ப்பதற்கும் அதன் சரித்திரத்தைத் தெரிந்து கொள்வதற்கும் மேற் கூறிய மூவரும் எனக்குப் பேருதவி செய்தார்கள். அவர் களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1300.
081:6M97 8:13
76, UNIVERSITY EXTENSION LIBRARY, MADURAI
31 MAY 1957

முற்றும்

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
University Grants Commission